பாலவித்யா
தொகுதி 2 பகுதி 5
மே 1931

DL
[illegible], N30 BV
M31.2.0
188782

1128 Regd. No. M. 2573.



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பிநங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளி நாட்டிற்கு ரூ 20

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி.பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பிநங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி.பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:-- நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11
மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

JUN 1931

# பாலவித்யா

(மாதப் பத்திரிகை)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"



| | | |
|---|---|---|
| தொகுதி II | 1931ஆம் மேமீ<br>பிரஜோத்பத்திஆம் வைகாசிமீ | பகுதி V |



ஸ்ரீ

## தமிழ்.

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் எழுதியது.

இவ்வுலகிடை மக்களாவார் வழங்கும் மொழிகள் பலவுள. அவற்றுள் ஒன்றாகும் நம் வண்டமிழ்மொழியும். பண்டைக்காலத்து இச்செம்மொழி பெரும் பரப்பில் பயின்றுவரப்பட்டதேனும், இது போழ்தில் நம் மிந்தியாவின் தென்கீழ்ப் பகுதியில் வழங்கப்பட்டு வருகின்றது. தொன்மையும், இலக்கண, இலக்கிய நுண்மையும் வாய்ப்புடையது கடும் புனலானும், அடுங்கனலானும், கொடுங்கோன்மையினானும் அழிந்தனவொழிய எஞ்சியனவாக எண்ணிறந்த விழுமிய நூல்களுடையது. ஆன்றோர் வாழ்த்துரைக் கிலக்காகப் பல புதுமொழிகளுக்குத் ... பொருட் பொலிவு, இயற்கை நவிற்சி ... பல

கலங்களை யுடைமையில் ஆரியமுதலிய ஏனைப் பல சீரியமொழிகட்குச் சிறிதும் பின்னிடையாதது. சுருங்கக் கூறின், மொழிச்சீர்மைகள் பலவும் இழைத்ததவாநோன்பின் பெரும்பயனிதுவேயாமெனப் பலரும் போற்றும் பெருந்தகைமைக்கு நிலைக்களனுவது இவ்வின்றமிழேயாம்.

## தோற்றம்.

உயிர்களின் தோற்றம் எங்ஙனம் இறைவனைச் சார்ந்துள்ளதோ அங்ஙனமே மொழிகளின் எழுச்சி மக்களைப் பொருந்தியுள்ளது. உபசாரவழக்காக, மொழிகள் இறைவனிடமிருந்தே தோன்றின என்ற கூற்றினும் ஒருவகை உண்மையுள்ளது. உலகிலுள்ள நாடுகளின் நிலை யாண்டும் ஒரேபடித்தாக இருப்பதில்லை இயற்கையானும், செயற்கையாலும் தோற்ற மாற்றங்கள் நிகழ்ந்தேவரும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் முன்னர் நாடுகளும், கண்டங்களும் ஒருவித அமைப்பும், எல்லைகளும் உடையனவாயிருந்திருத்தல் கூடுமென்பதில் ஐயம் ஒரு சிறிதுமில்லை. பண்டைய அவ்வமைவும் எல்லைகளுமே தற்காலத்தும் இருந்தாதல் வேண்டுமென்ற நியதியிலது. இவ்விதமே நம் நாடாகிய இவ்விந்தியாவின் உத்தரபாகமாகிய வடவிந்தியாவும், உலகில் உன்னதமிக்கதாய பனிவரையும் ஒருகாலத்துக் கடற்கீழிருந்தெழுந்தனவே என்று தக்க சான்றுகளுடன் உறுதிகூறுகின்றனர். தற்போதுள்ள இந்துமகாசமுத்திரமென்னுங் கடலிடத்தின் பெரும்பாகம் நாடாக நிலவியிருந்ததென்றும் ஆராய்ந்து முடிவுரைக்கின்றனர். இத்தகை நிலவமைதியினை இந்தியநாடு எய்தியிருந்தஞான்றே தமிழ்மொழி பெருவழக்குடையதாக நன்னிலை பெற்றிருந்தது எனத் துணியப்படுதலின், அக்காலத்துக்குப் பல்லாண்டுகள் முன்னரே இம்மொழி தோன்றப்பெற்றிருத்தல் வேண்டுமென்பது மொழிநூற்புலவர் பலரும் ஒப்பக்கூடியதொன்றாம். மற்று மிம்மொழியினுதிப்பினைத் தெய்வத்தின்பாற் சார்த்திக் கூறுதலும் இதன் பழமையினையே வலியுறுத்தும். புராதனங்குறித்து எத்துணைப் பெருமையினை யிம்மொழியின்பாலேற்றினும் சற்றும் மிகைபடாது. மொழியின் தொ[illegible] சீர்மைக்கு மொழியினரும் உரிமையுடையவரேய[illegible] றுதியாம். (தொடரும்.)



29. மணங்காண வந்திருந்த தந்தை தாயர்
மலர்ப்பதந்த மணிமுடிமேற் சூடி நீடு
பணங்கங்கை கொன்றைமதி முடியிற் சூடும்
பரமபதி யருள்வாழ்த்துப் பெற்று முற்றுங்
குணங்கொண்ட தேவர்முசு குந்த னார்க்குக்
குலவுவிடை கொடுத்தனுப்பித் தம்பி மார்தங்
கணங்காவல் புரிந்திடச்சேற் கண்ணி யோடுங்
கலவிபுரிந் துவந்திட்ட கந்த வேளே!

30. துவளுமிடைப் பவளவிதழ்க் கமலச் செங்கண்
மதாங்குகுழற் பைந்தொடிக்கை யன்னை யோடுந்
தவளமதக் கரிமுத்தஞ் சந்தக் கோடு
கவர்ந்தருவி சொரிகிரிக்க ணுவள கத்தே
தவளநிறத் தவிசினிடைப் பன்னாட் டங்கத்
தாழ்ந்தமரர் போற்றிடவக் குவட்டி னின்றுந்
துவளமுடைத் துறக்கத்துக் கேகி முன்னைத்
துறக்கத்தைச் சிறக்கச்செய் திட்ட வேளே!

31. சூரனுரை யாலழிந்த தேவ நாட்டைச்
சுந்தரமுன் னினும் பெறுமா றருளிப் பின்னர்
சூரன்கொடு மையிலிழந்த மகுடந் தன்னைச்
சூரொழிந்த விந்திரனின் முடியிற் சூட்டி
வீர! மிகு, தீர! மிகு, சூரைக் கொன்று
வீடளித்த சொண்டல்! என அண்டர் வேண்ட
மூரன்முறு வல்பூத்த வம்மை யோடு
முழுதுமகிழ்ந் தவணிருந்த மூரித் தோளாய்!

32 இன்னவகை விண்ணாட்டிற் சின்னாட் டங்கி
யிடமருங்கின் மடவாரோ டமரு நாதன்
மன்னுதிருக் கயிலையினுட் சென்று தந்தை
மாதாவின் பாதார விந்தஞ் சூடி
அன்னவர்த மருள்பெற்று விடையும் பெற்றே
யடல் வீர ரொடுஞ்சோதிக் கந்த வெற்பில்
துன்னுமடியார் போற்ற வீற்றி ருக்குந்
தூயவ! நின் னடிமலரென் முடியேற் றேனே!

33. பண்டிழைத்த தவவலியால் மானாய் நேர்ந்து
பைங்கூந்தற் கமலைக்கு முனிமா லீக்கும்
விண்டுடைக்குந் தணிகைவரை வேடர் தொட்ட
வியன்வள்ளிக் குழியினிடைக் குழவி யாகக்
கண்டெடுத்த விந்திரனும் வேடர் வேந்தன்
களிந்தீந்த வள்ளிப்பேர் கொள்ளப் பெற்ற
கண்டிழித்த மொழியினளைக் காண வேண்டிக்
கந்தவரை நீங்கிவருங் கடம்ப நாதா!

34. தினைப்புனத்தைக் காவல்செயும் வேற்க ணாளைத்
திருந்தமணம் புரிந்திடற்காத் தணிகைக் குன்றம்
வினைப்பவத்தை யறுத்தருளும் பாதம் நோவ
வேடரா யவள்பாணி னருகே சென்று
முனைப்பவத்தை முடுகியருள் வேத வாயால்
முழுமதிநேர் வதனியவள் முன்னே நின்று
எனைப்பிடித்த வின்பநகை தீர்க்க வென்றே
ஏதமிலா துரைத்திட்ட வெங்கள் கோவே!

35. களங்கமகல் விளங்குமதி வதனத் தாள்முன்
காதல்விதை வளர்கழனிக் கண்ணி னாள்முன்
விளங்கிமறை கின்றதுடி யிடையாள் முன்னம்
விரிபதும நேரொத்த பதத்தாள் முன்னம்
உளங்குழைய ஒருமொழியு மொழியாள் முன்னம்
உயர்ந்துபுகழ்ந் துரைக்கின்ற வேளை தன்னில்
விளங்குதிரு வரைவேந்தன் வருதல் கண்டே
வேங்கைமர மாகிநின்ற வேத வாழ்வே!

வேறு.

36. வந்த வேடுவ ரந்தவள்ளியை
வந்த வேங்கை யிதேதென
இந்த வேங்கை யறிந்திலேனென
வெந்த வேங்கைய தன்றெனை
தந்து நின்றிட வென்றவள்ளிதன்
தந்தை தன்னிட முன்னிட
அந்த வேளைய வண்முனின்றெனை
யாவனென்றுரை வேங்கை[illegible]



அந்தோ! தன் புருஷன் அவ்விதம் கஷ்டப்படுவதையும், அவனுக்குத் தன்மீதுள்ள அளவற்ற காதலையு மறிந்த அப்பெண்மணியின் மனோநிலைமையை நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ? ஆனாலும் அவள், தன் கவலையையும் பயத்தையும் மெச்சத்தக்கவிதம் மறைத்துக்கொண்டு, தைரியத்துடன் அன்பொழுகும் சொற்களால், தன் புருஷனுக்குப் பல தேறுதல்கள் கூறியவண்ணம், மிகவும் பக்தியுடன் அவனுடைய கண்களிலிருந்து பிரவாகமாய்க் கொட்டிக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தாள். அவளுடைய உபசாரணைகளின் பலனாயும், அவளுடைய இனிய குரலின் சக்தியினாலும், வாசுதேவன், சீக்கிரம் தன் துக்கத்தை ஒருவாறு மறந்து, அயர்ந்து தூங்கிவிட்டான். அதை யறிந்த அப்பெண்திலகம், மெல்ல எழுந்து, கொஞ்சநேரம் தன் புருஷனுடைய முகத்தை யுற்றுநோக்கியவண்ணம் நின்றாள். பிறகு, அவள், தன் அழகிய இரு கரங்களையும் கூப்பி, "ஹே! அநாதரக்ஷகா! களங்கமற்ற இவருடைய முகத்தைக் கண்ட எவரும், இவர் தன் தந்தையையே கொல்லத்துணிவாரென்று சொல்லமுடியுமோ? இவர் சுத்த நிரபராதியென்பது உமக்காவது தெரிந்திருக்க வேண்டும். ஆகவே, இவரைக் காப்பாற்றி, எனக்கு மாங்கல்யப்பிச்சை யளிப்பது உம்முடைய கடமை." என்று பிரார்த்திவிட்டு, "சரி; இருக்கட்டும். இக்கொலை நடந்தது முதற்கொண்டு என் தமயன் பாலகிருஷ்ணன் வாயைத் திறக்கவேயில்லை. அவன் இவ்விதம் மௌனம் சாதிக்கும்பொழுதெல்லாம், அவனுடைய மூளை மிகவும் ஊக்கத்துடன் ஏதோ வேலைசெய்கிறதென்பது எனக்குத் தெரியும். உடனே சென்று அவனைப் பார்ப்போம்." என்று தீர்மானித்து, தன் புருஷன் அயர்ந்து நித்திரை செய்கிறானென்பதை மறுபடியும் நிச்சயித்துக்கொண்டு, பாலகிருஷ்ணனுடைய அறையை நோக்கிச் சென்றாள்.

நிற்க, பாலகிருஷ்ணன் தன் அறையில் சிந்தாசாகரத்தில் மூழ்கியவனாய் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தான். அவனுக்கு தங்கம்மாளைத் தவிர வேறு சகோதரிகளில்லை. ஆகவே, அந்த நற்குணவதியிடம்

அவன் அளவு கடந்த பிரியம் வைத்திருந்தது எதிர்பார்க்கத்தக்கதே. அவளுடைய புருஷனுக்கு நேரிட்ட ஆபத்து தனக்கே வந்ததாக நினைத்து, வாசுதேவனை அதிலிருந்து மீட்க என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருந்தான். "சரி; சவப்பரீக்ஷை செய்த டாக்டர்கள், முத்தையா செட்டியார் அன்று இரவு 11 மணி சுமாருக்குக் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று கூறினார்கள். என் தங்கை புருஷன் ஒருநாளும் இதைச் செய்திருக்க மாட்டானென்பது நிச்சயம். ஆனால் அன்று இரவு அவன் வீட்டிற்குத் திரும்பிவந்தபொழுது மணி 12-க்கு மேலிருக்கும். இதுவரையில் இதைப்பற்றி அவனுடன் பேச பிரமயமே ஏற்படவில்லை. இப்பொழுது, அவன் இக்கொலை நடந்ததற்கு முன்னமேயே அவ்வீட்டை விட்டு வந்துவிட்டானென்றும், அப்படி அவன் வந்திருக்கும்பக்ஷத்தில், அதற்கும் இங்கு வந்ததற்குமிடையில் என்ன செய்தானென்பதையும் கண்டுபிடிக்கவேண்டும். ஹா! என் அருமைத் தங்காய்! உன் புருஷனுக்கு உத்தியோகமாய்விட்டது. இனி நீ அவனுடன் சுகமாயிருப்பாயென்று சந்தோஷித்தேனே. அந்தோ! அன்று அவன் உன்னை அழைத்துச்செல்லும்பொருட்டு வந்ததும், அதுவரையில் வாடி துவண்டு கிடந்த உன் முகம் மலர்ந்து சந்திரபிம்பம்போல் விளங்கவே, நான் உன்னுடைய மனமகிழ்ச்சியைக் கண்டு, எவ்வளவு ஆனந்தித்தேன்? இதற்குள் இந்த ஆபத்து வந்துவிட்டதே. அம்மா! ஆனாலும், உன்னை தெய்வம் காப்பாற்றுவாரென்பது நிச்சயம். அதுவுமன்றி, நான் ஆணாயிருக்கும்பக்ஷத்தில், வாஸ்தவத்தில் செட்டியாரைக் கொன்ற சண்டாளனைக் கண்டுபிடித்து, உன் புருஷனையும் அதன்மூலம் உன்னையும் காப்பாற்றுவேன் என்பது சத்தியம்." என்று சபதம் செய்துகொண்டான். ஆனால், தன் தங்கையின் நிலைமையைப் பற்றி நினைத்ததும் அவனுடைய கண்களில் நீர் தளும்பியது.

அதே சமயம் உள்ளே நுழைந்த தங்கம்மாள், தன் தமயனுடைய முகவாட்டத்தைக் கண்டதும்,



"அண்ணா! நீ மிகவும் வருத்தப்படுவதுபோலிருக்கிறதே." என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"அம்மா! ஆனால் வருத்தப்படாமல் சந்தோஷிக்க இது காலமோ?" என்று கேட்டான். உடனே அப்பெண்மணி, அவனருகிற் சென்று, அவனை யுற்றுநோக்கிய வண்ணம்,

"நமக்கு பெரும் ஆபத்து சம்பவித்திருப்பது வாஸ்தவமே. ஆனால் வீணில் கவலைப்பட்டு, கண்ணீர் வடிப்பதில் என்ன பிரயோஜனம்? பெண்ணாய்ப் பிறந்த நான் அழுவதும், கவலைப்பட்டு சாவதும் ஒப்பத்தகுந்ததேயொழிய, உன்னைப்போன்ற ஆண் சிங்கங்கள் இப்போர்ப்பட்ட ஆபத்து நேரிடுங்கால், அதை வெல்ல யத்தனிக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆண்மைத்தனமும் யுக்தி புத்தியும் நிறைந்த நீ இவ்விதம் கலங்கி மனோதைரியத்தைக் கைவிட்டது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது." என்றாள்.

தன் தங்கையின் தீரமொழிகளைக் கேட்டதும் பாலகிருஷ்ணன், கொஞ்சம் வெட்கி, உடனே விடையளிக்கவில்லை. பிறகு,

"அம்மா! நான் கவலையுற்று, கண்ணீர் உதிர்த்தேனென்பது வாஸ்தவமே. ஆனால் நான் என் மனோதைரியத்தைக் கைவிட்டுவிட்டேனென்று நீ நினைப்பது பிசகு. நீ நம்புவாயாகில், நீ உள்ளே நுழையும்பொழுது, இக்கொலையைச் செய்த பாதகனைக் கண்டுபிடித்து உன் புருஷனைக் காப்பாற்றாமல் விடுவதில்லையென்று சபதம் செய்துகொண்டிருந்தேன்." என்று உறுதியுடன் கூறவே, அப்பெண்திலகம்,

"அண்ணா உன் வார்த்தைகளைக் கேட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இன்னும் நான் உன்னை நிந்தித்துப் பேசியதாக நீ நினைக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உன் ஆண்மைத்தனத்தையும் ஊக்கத்தையும் கிளப்பும்பொருட்டு அவ்விதம் கூறினேனேயன்றி வேறல்ல. சரி; இப்பொழுது நீ என்ன செய்வதாய் நிச்-

சயித்—" என்று அவள் மேலே பேசுமுன், அவ்வறையை நோக்கி யாரோ அவசரத்துடன் வரும் சப்தம் கேட்கவே, தன் பேச்சை நிறுத்தி, வெளிப்பக்கம் திரும்பினாள். மறு நிமிஷம், கலவரப் பார்வையுடனும், ஆவலுடனும், தன் தமயனுடைய தோழன் ராமானுஜம் அவ்வறைக்குள் நுழையவே, அவ்வாலிபனுடைய முகத்திலிருந்து அவன் ஏதோ முக்கியமான கார்யத்தை யுத்தேசித்து வந்திருக்கிறானென்பதை யறிந்து, உடனே வெளியே போய் விட்டான்.

நிற்க, உள்ளே வந்த ராமானுஜம், தன் நண்பனைப் பார்த்து,

"பாலகிருஷ்ணா! நான் முத்தையா செட்டியாரைக் கொலை செய்த சண்டாளனைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருக்கிறேன்." என்று உறுதியுடன் கூறவே, பாலகிருஷ்ணன், வியப்புற்று, ஆவலுடன்,

"ஏண்டா! உனக்கும் முத்தையா செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினான். ராமானுஜம்,

"சம்பந்தமுண்டு. சரி; முந்தாநாள் மாலை அத்தோட்டத்தில் நீயும் நானும் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்?" என்று கேட்க, பாலகிருஷ்ணன், கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு,

"ஏன்? உன் காதலி மரகதவல்லியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்." என்று விடையளித்தான். உடனே ராமானுஜம்,

"சரி; இக்கடிதத்தை வாசித்துப்பார்." என்று கூறிய வண்ணம், ஒரு கடிதத்தை தன் நண்பனிடம் கொடுத்தான். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:—

"ராமானுஜ முதலியாருக்கு,

நீர் நகை வியாபாரி முத்தையா செட்டியை வாஸ்தவத்தில் கொன்றது யாரென்பதைக் கண்டுபிடிப்பீரானால், உன் காதலி மரகதவல்லியை விவாஹம்செய்துகொள்ளமுடியும்."



# அத்தியாயம் 4.

மூன்றாவது அத்தியாயத்தின் இறுதியில் நாம் கூறிய கடிதத்தை வாசித்ததும் பாலகிருஷ்ணனுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை.

நிற்க, ராமானுஜத்தினிடம் அக்கடிதம் வந்தவிதம் என்னவென்பதைக் கூறுவோம். ராமானுஜம் டாக்டர் கேசவ முதலியாருடைய மகள் மரகதவல்லியைக் காதலிப்பதாகவும், அதையறிந்த கேசவ முதலியார் தன் புதல்வியை அவனுக்கு விவாஹம் செய்துகொடுக்க சம்மதித்தாரென்றும், இக்கதையின் ஆரம்பத்திலேயே கூறிவிட்டோம். இன்னும் ராமானுஜம் தினந்தோறும் அவருடைய வீட்டிற்குச் சென்று தன் காதலியைக் கண்டு பேசும் வழக்கமுண்டென்பதையும் நம் நேயர்களறிவார்கள். ஆகவே, அன்று காலை சுமார் 9 மணிக்கு, அவன் அவ்வீட்டிற்குள் நுழையும்பொழுது, கேசவ முதலியாருடைய தமக்கை மகன் கோவிந்தசாமி அதிலிருந்து வெளியே வருவதைக் கண்டான். கோவிந்தசாமி ராமானுஜத்தைப் பார்த்ததும் ஒருதரம் அவனை இறுமாப்புடன் நோக்கிவிட்டு, பிறகு, அவனிடம் தனக்குள்ள அவமதிப்பையும் அலக்ஷியத்தையும் காண்பிக்கும்பொருட்டு, அவனுடைய காலடியில் காரி உமிழ்ந்துவிட்டு, வஞ்சகமாய்ச் சிரித்தவண்ணம் போய்விட்டான். இதைக்கண்ட ராமானுஜத்துக்கு உண்டான கோபத்திற்களவில்லை. அவன் முதலில் அப்படியே பாய்ந்து, கோவிந்தசாமியின் குடுமியைப் பற்றி, முதுகில் ஓங்கி ஒரு அறை வைக்கலாமென்று யோசித்தான். ஆனால் உடனே தன் சினத்தை யடக்கிக்கொண்டு உள்ளே சென்றான். அங்கு மரகதவல்லி தனிமையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய அழகிய வதனம் வாடியிருப்பதைக் கண்டதும் ராமானுஜம் திடுக்கிட்டான்.

மரகதவல்லி நன்றாய்ப் படித்தவள். ஆனால் தற்காலத்தில் கொஞ்சம் படித்த பெண்களிடம் சாதாரண

மாய்க் காணப்படும் பயமற்றதனமும் அகம்பாவமும் சிறிதுமின்றி மிகவும் அடக்க ஒடுக்கமுள்ளவள். அவளுடைய தாயார் அவளுடைய ஐந்தாவது பிராயத்திலேயே இறந்துவிட்டதால், அச்சமயம் அவ்வீட்டில் அவளைத்தவிர வேறு பெண்பிள்ளைகள் கிடையாது. தன் தந்தைக்கு ஏராளமான வருமானமிருந்தபோதிலும் வீட்டிலுள்ள சமையல் முதலிய கார்யங்களை அவளே செய்துவந்தாள்.

ராமானுஜத்தைக் கண்டதும் அவளுடைய முகம் மலர்ந்தது. உடனே எழுந்து மரியாதையுடன் நின்றாள். ராமானுஜம், அவளை ஆவலுடன் நோக்கியவண்ணம்,

“மரகதம்! என்ன விசேஷம்? உன் விசனத்திற்குக் காரணமென்ன?” என்று கேட்க, மரகதவல்லி உடனே விடையளிக்காமல் மௌனமாயிருந்தாள். இதைக் கண்ட ராமானுஜத்தின் சந்தேகம் அதிகரித்தது. பிறகு, “சரி; அந்தப் பயல் கோவிந்தசாமி உன்னிடம் ஏதோ வம்பு செய்திருக்கிறான். ஏன்? நான் சொல்வது வாஸ்தவம்தானே?” என்று வினவினான்.

**மரகதம்.**—தற்சமயம் என்னுடைய விசனத்திற்குக் காரணம் என்னிடம் அவன் வம்பு செய்யாததே.

**ராமா.**—(வியப்புற்று) என்ன? நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே.

**மரகதம்.**—கோவிந்தசாமி தினந்தோறும் இங்கு வந்து என்னை மயக்கப் பிரயத்தனப்படுவதுண்டு. ஆனால், இன்று காலமே சுமார் 7 மணிக்கு, அவன் இங்கு வந்தபொழுது, நான் அவன் வழியில் நின்றுகொண்டிருந்தும், என்னைத் திரும்பிக்கூட பார்க்காமல் கர்வத்துடன் கனைத்துக்கொண்டு, நேரே என் தந்தையிடம் சென்றான். என் தந்தைக்கு, அவன் அடிக்கடி இங்கு வருவதிலும், என்னுடன் தனிமையில் பேசுவதிலும், இஷ்டமில்லையென்பதும், அவர் அவனுடன் முகங்கொடுத்துப் பேசுவதில்லையென்பதும் உங்களுக்கே தெரியும். ஆனால் இன்று கிட்டத்தட்ட ஒரு



மணி நேரம் வரையில் அவனுடன் பேசிக்கொண்டிருந்தார். அதுவுமன்றி அவர் கடைசியில் வெளியே வந்தபொழுது, அவருடைய முகத்தில் நான் இதுகாறும் காணாத பல வித்தியாசங்கள் தென்பட்டன. உடனே என்னிடம் சீக்கிரம் வந்துவிடுவதாகக் கூறிவிட்டு, வெளியே போய்விட்டார். அவர், நான் இவ்வீட்டில் தனிமையாயிருக்கும்பொழுது, இவ்விதம் கோவிந்தசாமியை இங்கு விட்டுவிட்டுப் போவதில்லை. அவர் போனதும் கோவிந்தசாமி என்னிடம் வந்தான்.

**ராமா.**—வந்து என்ன செய்தான்?

**மரகதம்.**—சுமார் அரைமணி நேரம்வரையில் பேசிக்கொண்டிருந்தான். இப்பொழுதுதான் அவன் போய் 5 நிமிஷமிருக்கும்.

**ராமா.**—ஆமாம். நானும் அவனை இவ்வீட்டு வாசலில் கண்டேன். சரி; உன்னிடம் அவ்வளவு நேரம் என்ன பேசிக்கொண்டிருந்தான்?

**மரகதம்.**—அவன் பேசியது முழுமையும் உங்களைப் பற்றியே.

**ராமா.**—அப்படியா? அவன் என்னைப்பற்றி பேசுவானென்று நான் நினைக்கவில்லை. சரி; என்ன சொன்னான்?

**மரகதம்.**—நீங்கள் சிறிதும் ஆண்மைத்தனமில்லாத கோழையென்றும் இன்னும் பலவிதமாக நிந்தித்துப் பேசினான்.

**ராமா.**—அடாடா! நான் அவனை வாசலில் உதைக்காமல் விட்டது பிசகு. சரி; நான் ஆண்மைத்தனமற்ற கோழையென்று கூறிவிட்டு ஆண்சிங்கமாகிய தன்னைக் கட்டிக்கொள்ளும்படி உன்னைக் கேட்டானோ?

**மரகதம்.**—இல்லை. அவன் தன்னைப்பற்றி பேசவேயில்லை. உங்களைப்பற்றி நிந்தனை முடிந்ததும், ‘காதல்’ என்ற விஷயத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தான்.

ராமா.—பேஷ்! அவனுக்குப் பிரசங்கம் செய்யத் தெரியுமென்று நான் நம்பவில்லை. சரி; காதலைப்பற்றி அவனுடைய அபிப்பிராயமென்ன?

மரகதம்.—இக்காதல் என்ற உணர்ச்சி சாதாரணமாய் எழுதப்படும் நாவல்களில்மட்டும் உண்டேயொழிய, தற்காலம் நடக்கும் விவாஹங்களில் சம்மந்தப்படுவதே இல்லையென்று கூறினான்.

ராமா.—சபாஷ்! பிறகு?

மரகதம்.—அவன் என்னென்னமோ பேத்திக்கொண்டிருந்தான். நான் அதை கவனிக்கவில்லை.

ராமா.—ஆனால் இப்பொழுது உன்னுடைய விசனத்துக்குக் காரணம் இதுதானே?

மரகதம்.—இதுமட்டுமல்ல. நான் கவலைப்படுவதற்கு மற்றொரு காரணமுமுண்டு.

ராமா.—என்ன? என்ன?

மரகதம்.—நீங்கள் அன்று என்னை அக்குளத்தில் காப்பாற்றியதிலிருந்து, என் தந்தை உங்களை எங்கள் வீட்டுக் குலதெய்வமென்றே மதித்து, ஒவ்வொரு நாளும், குறைந்தது கால்மணி நேரமாவது, உங்களைப்பற்றி புகழ்ந்து பேசாமலிருப்பதில்லை. அப்பேர்ப்பட்டவர், இன்று கோவிந்தசாமியுடன் வெளியேவந்ததும், நான் எது சம்மந்தமாகவோ உங்களைப்பற்றி பேச நேரிட்டபொழுது, தன் முகத்தை சுளுக்கிக்கொண்டார். அது, அவ்விதம் நான் உங்களைப்பற்றிப் பேசுவதில் இனி தனக்கிஷ்டமில்லையென்று கூறுவது போலிருந்தது

ராமா—அசடே! வீணில் கவலைப்படாதே. அவர் நீ பேசியபொழுது ஏதேனும் சிந்தனையுடனிருந்திருப்பார்.

மரகதம்.—இருக்கலாம். ஆனாலும் எனக்கென்னமோ சந்தேகமாயிருக்கிறது.



ராமா.—சரி; அதிருக்கட்டும். இப்பொழுது கோவிந்தசாமி 'காதல்' என்ற விஷயத்தைப்பற்றி பிரசங்கம் செய்திருப்பதால் நானும் அதைப்பற்றி எனக்குள்ள அபிப்பிராயத்தை வெளியிடவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. மரகதம்! நீயும் நன்றாய்ப் படித்த புத்திசாலியாகையால் இதைப்பற்றி நான் உனக்கு அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. இக்கலியுகத்தில், உண்மையில் காதலிக்கும் இருவர் பலவித இடையூறுகளின்றி விவாஹம் செய்துகொள்ளுவது முடியாத காரியம். அவர்கள்மீது பொறாமைகொண்டு எவ்விதத்திலாவது அவர்களைப் பிரிக்க, கங்கணம் கட்டிக்கொண்டு, பலபேர் முன்வருவார்கள். ஆகவே, அப்படி வரும் இடையூறுகளை வென்று, அக்காதலர்கள் ஜயமடையவேண்டுமானால், அவ்விருவரும், எக்காரணத்தைக்கொண்டும், தங்களுடைய தீர்மானத்தை மாற்றுவதில்லையென்று முதலில் சபதம் செய்துகொள்ளவேண்டும். ஆதியிலிருந்தே உன் அத்தை மகன் உன்னைக் கட்டிக்கொள்ள ஆசைப்படுகிறானென்பது எனக்குத் தெரியும். இப்பொழுது அவனே நம்முடைய விரோதி. ஆகையால் நீ செய்யவேண்டியது என்னவென்றால்,—

ஆனால் ராமானுஜம் தன் பேச்சை முடிக்குமுன், அவ்வீட்டிற்குள் யாரோ நுழையும் சப்தம் கேட்கவே, அப்படியே நிறுத்திவிட்டான். மறுநிமிஷம் டாக்டர் கேசவ முதலியார் உள்ளே வந்தார். அவர், ராமானுஜத்தைக் கண்டதும் வாயைத் திறக்காமல், தன்னுடன் அவனை வரும்படி ஜாடை செய்துவிட்டு, தன் அறைக்குப் போய்விட்டார். அவ்வாலிபன் உள்ளே வந்ததும், தன்னெதிரில் உட்கார்ந்துகொள்ளும்படி கூறிவிட்டு, அவனையுற்றுநோக்கினார். ராமானுஜம், அவருடைய முகத்தைக் கண்டதும், மரகதவல்லி பட்ட கவலை நியாயமேயென்று நினைத்தான். இவ்விதம் இருவரும் கொஞ்சநேரம் மௌனம் சாதித்தனர். அதன் முடிவில் முதலியார்,

"ராமாநுஜம்! இப்பொழுது நான் உன் தந்தையிடமிருந்து வருகிறேன்." என்றார். இதைக் கேட்டதும், ராமாநுஜம், ஆவலுடன்,

"அப்படியா? என்ன விசேஷமோ?" என்று வினவினான். வரவர, கேசவ முதலியாருடைய குழப்பமும் தடுமாற்றமும் அதிகரித்தன. அவர்,

"அப்பா! நான், சில காரணங்களால், என் மகளுடைய விவாஹத்தைப்பற்றி செய்திருந்த தீர்மானத்தை மாற்றவேண்டியிருக்கிறது." என்றார். இதை ராமாநுஜம் எதிர்பார்த்தபோதிலும், அவனுக்குண்டான விசனத்திற்களவில்லை. கொஞ்சநேரம் திகைப்புற்று பிரமித்துட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய மனோநிலைமையைக் கண்டறிந்த கேசவமுதலியார், "அப்பா! ஆனால் நான் இப்படி வேறு பையனை நிச்சயித்ததற்குக் காரணம், நீ என் பெண்ணை விவாஹம் செய்துகொள்ள யோக்கியதையற்றவனென்பதல்ல.

ராமா. – அப்படியானால் வேறு என்ன காரணமிருக்கக் கூடும்?

முதலியார்.—அப்பா! அதைச் சொல்ல எனக்கிஷ்டமில்லை.

ராமா.— நீங்கள் அதைச் சொல்லவேண்டுமென்று நான் பலவந்தம் செய்யமுடியாது. ஆனாலும் நான் இவ்வளவு துர்அதிர்ஷ்டசாலியாயிருப்பேனென்று நான் நினைக்கவில்லை.

முதலியார்.—நான் இப்படித் திடீரென்று என் தீர்மானத்தை மாற்றவேண்டியிருக்குமென்று கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை.

ராமா.—ஐயா! உங்களுடைய மகளை உங்களிஷ்டப்படி விவாஹம் செய்துகொடுக்க உங்களுக்கு அதிகாரமுண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் உங்களைப்போன்ற படிப்பாளிகள் தங்களுடைய பெண்களை அவர்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் விவாஹம் செய்துவைப்பது மிகவும் பாபகரமான கார்யமென்பதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.



முதலியார். – நியாயமே. ஆனால் நான் இவ்விதம் என் தீர்மானத்தை மாற்றவேண்டிய அவசியத்தை மரகதவல்லி அறிந்ததும், அவள் நான் சொல்லுவதற்கு உடனே சம்மதிப்பாளென்பது நிச்சயம்.

ராமா. — சரி; இதைப்பற்றி நான் உங்களுடன் தர்க்கிப்பது பிசகு. ஆனால் நீங்கள் இப்பொழுது நிச்சயித்திருக்கும் அம்மற்றொரு பையன் யாரென்பதை நான் தெரிந்துகொள்ளலாமோ?

முதலியார்.—குசாலாய்த் தெரிந்துகொள்ளலாம். அது என்னுடைய தமக்கை மகன் கோவிந்தசாமியேயின்றி வேறல்ல.

ராமா.—ஐயா! என்னுடைய பதட்டத்தை தயவுசெய்து மன்னிக்கவேண்டும். இந்த கோவிந்தசாமியின் விஷயங்கள் என்னைக்காட்டிலும் உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்கவேண்டும். அப்படியிருந்தும், நீங்கள் மரகதவல்லியை அவனுக்குத் தத்தம் செய்வதைக் காட்டிலும், அவளை விஷம் வைத்துக் கொன்றுவிடுவது மேல்.

முதலியார்.—(இதைக் கேட்டதும், அவருடைய குழப்பம் அதிகரித்தபோதிலும், உறுதியுடன்) அவளுடைய க்ஷேமத்தைக் கவனிக்கவேண்டியது என்னுடைய கடமையேயொழிய உன்னுடையதல்ல.

ராமா.—இருக்கலாம். சரி; ஆனால் நான் எக்காரணத்தைக்கொண்டும் அவளை விவாஹம் செய்துகொள்ள முடியாது?

முதலியார்.—முடியாதென்றே நினைக்கிறேன்.

ராமா.—ஆகவே, நான் கோவிந்தசாமிக்கும் கேடுகெட்டவனைப் போய்[illegible]

முதலியார்.—என்னுடைய அபிப்பிராயம் அது அல்ல. நான் என் மகளை அவனுக்குக் கொடுக்க நிச்சயித்ததற்குக் காரணம் நீ அவளை விவாஹம் செய்துகொள்ள யோக்கியதையற்றவன் என்பதல்லவென்று முதலிலேயே சொல்லிவிட்டேன். இன்னும் கோவிந்தசாமியின் நடவடிக்கைகள் அவ்வளவாக திருப்திகரமாயில்லையென்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், ஒரு குடும்பத்தில் ஒருவன் சற்று சரியாயில்லையென்ற ஒரு காரணத்தால் அவனை அக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் கைவிட்டுவிடுவது நியாயமல்ல. அவனைத் திருத்தி நல்ல மார்க்கத்துக்குக் கொண்டுவரவேண்டியது அவர்களுடைய கடமை.

ராமா.—வாஸ்தவமே. கோவிந்தசாமியைத் திருத்துவது உங்களுடைய கடமையென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அதன்பொருட்டு நீங்கள் உங்களுடைய மகளை அவனுக்குக் கொடுக்கவேண்டியது அவசியமென்று எனக்குத் தோன்றவில்லை.

முதலியார்.—அப்படியல்ல அவன் மரகதவல்லியை விவாஹம் செய்துகொண்டால் சீக்கிரம் திருந்திவிடுவானென்று என் தமக்கை நம்புகிறாள். அவள் ஒருத்தியே எனக்கிப்பொழுதுள்ள பந்துவாகையால் அவளுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் நான் நடக்க முடியாது.

ராமா.—ஆனால் நீங்கள் தமக்கையைக் காட்டிலும் மகளே முக்கியமென்று கருதுவீர்களென்று நம்பினேன். அது எப்படியிருந்தபோதிலும் அதைப்பற்றிப் பேச எனக்கு அதிகாரமில்லை. சரி; நான் உத்திரவு வாங்கிக் கொள்ளுகிறேன். (என்று மரியாதையுடன் நமஸ்கரித்துவிட்டு, அவ்வறையைவிட்டு வெளியே சென்றான்.)

ஆனால் கேசவ முதலியார், அவனை மறுபடியும் அழைத்து,

“அந்தப் பெண் உன்னைக் காதலிக்கிறாளென்பது எனக்குத் தெரியும் [illegible] அவள் [illegible] இனிப் பார்க்



கும்பகத்தில் அவளுடைய மனோநிலைமை குலைந்துவிடலாம். அதுவுமன்றி அவ்விஷயம் அவளை விவாஹம் செய்துகொள்ளப்போகும் புருஷனுக்குத் தெரிந்தால் அது பிறகு அவளையே பாதிக்கும். ஆகையால் நீ இனி இவ்வீட்டிற்கு வந்து அவளைப் பார்ப்பது—” என்று மேலே பேசுமுன், ராமானுஜம், கொஞ்சம் ஆத்திரத்துடன்,

“ஐயா! நான் ஏழையாயிருந்தபோதிலும் ஒரு நற்குடியில் பிறந்து வளர்ந்தவனேயொழிய கேவலம் கேவாளியல்ல. எப்பொழுது நான் அவளை விவாஹம் செய்துகொள்ளுவது முடியாத கார்யமென்று ஏற்பட்டுவிட்டதோ அது முதற்கொண்டு நான் அவளைத் தனிமையில் கண்டு பேசுவது பிசகென்பது எனக்குத் தெரியும். அதுவுமன்றி, அவள் எனக்கு கிட்டா வஸ்துவாய்விட்டபோதிலும், அவளை எவ்விதத்திலும் பாதிக்கக்கூடிய கார்யத்தை நான் செய்யமாட்டேனென்பதை நீங்கள் பூர்ணமாய் நம்பலாம். இன்னும் உங்களுக்கு சந்தேகமிருக்குமானால், இனி அவளை உங்களுடைய உத்தரவின்றி பார்ப்பதில்லையென்று இதோ என் பெற்றோர்களின்மேல் ஆணையாய் சத்தியம் செய்து கொடுக்கிறேன்.” என்று கம்பீரத்துடன் கூறிவிட்டு, மடமடவென்று வெளியே போய்விட்டான்.

ராமானுஜம் போனதும், கேசவ முதலியார் கொஞ்ச நேரம் அப்படியே அசைவற்றுச் சிலைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவ்வாலிபனுடைய பெருந்தன்மையைக் கண்டதும், அவருடைய மனம் இளகி உருகுவதுபோலிருந்தது. சற்றுநேரத்திற்கெல்லாம், மரகதவல்லி அங்கு வரவே, அவளைக் கண்டதும், அவருடைய கண்களில் நீர் ததும்பியது.

நிற்க, வெளியே சென்ற ராமானுஜத்தின் மனோநிலைமையை நாம் வர்ணிக்கவேண்டியதில்லை. திடீரென்று பைத்தியம் பிடித்தவன்போல், தன்னெதிரில் வருபவர்களையும் கவனிக்காமல் தள்ளாடிக்கொண்டே, தன் வீட்டை நோக்கி நடந்தான். கடைசியில் தன் அறைக்குள் நுழைந்த

தும், வெட்டுப்பட்ட மரம்போல் தொப்பென்று ஒரு ஆஸனத்தில் விழுந்தான். பிறகு எழுந்து தன் சட்டைகளைக் களைந்து எறிந்துவிட்டு, மறுபடியும் உட்கார்ந்துகொண்டு பிரமையுடன் தரையை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். ஆனால், வரவர அவனுடைய மூளையே கலங்கி, தன் விசனம் அதிகரிக்கவே, நடந்த எல்லாவற்றையும் தன் நண்பனிடம் சொல்லுமெண்ணத்துடன் பாலகிருஷ்ணனுடைய வீட்டிற்குச் சென்றான். அச்சமயம் மணி 11 இருக்குமாகையால், பாலகிருஷ்ணன் அதற்குள் மரண விசாரணைக்குப் போய்விட்டான் என்பதை யறிந்து, மறுபடியும் தன் வீட்டிற்குவந்து போஜனாதிகளை முடித்துக்கொண்டு, தன் தந்தையின் அறைக்குச் சென்று படுத்துவிட்டான்.

இங்கு அவனுடைய வீட்டின் அமைப்பை சிறிது விவரித்து எழுதுவது உசிதம். அது மிகவும் பெரியதாய் இருந்ததால், ராமானுஜத்தின் தந்தை அதை இருபாகங்களாகத் தடுத்து, மற்றொரு பாகத்தில் புருஷோத்தம செட்டியார் என்ற ஒரு வக்கீலை குடிவைத்திருந்தார். அவ்வீட்டுத் திண்ணையின் இருபக்கங்களிலும், மாடிக்குச் செல்ல படிகளிருந்தன. மாடியில், இரண்டு பாகங்களுக்கும் பொதுவாக, ஒரு அழகிய வராண்டாவும், வீதியை நோக்கிய இரு அறைகளுமுண்டு. இவைகளில் ஒன்றே நம் ராமானுஜத்தினுடைய அறை. மற்றொன்று வக்கீல் புருஷோத்தம செட்டியார் வசமிருந்தது. எனவே, ராமானுஜத்தின் அறைக்கு வருபவர்களை அவ்வீட்டின் கீழ் பாகத்திலிருப்பவர்கள் கவனிக்க நியாயமில்லை. ஆனால் ராமானுஜம் தான் வெளியில் போகும்பொழுதெல்லாம், தன் அறையை வெளிப்பக்கம் பூட்டிவிடுவது வழக்கம்.

நிற்க, ராமானுஜம் தன் நித்திரை முடிந்து எழுந்திருக்கும்பொழுது மாலை சுமார் 4½ மணியிருக்கும். பிறகு, கீழே சென்று, தன் முகத்தைக் கழுவிக்கொண்டு, சமயலறைக்குச் சென்று, தன் தாயார் கொடுத்த காப்பியை சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் தன் நண்பன்பாலகிருஷ்ணனுடைய வீட்டிற்குப் போகுமெண்ணத்துடன் உடுத்திக்



கொள்ளும்பொருட்டு, மாடியில் தன் அறைக்குச் சென்றான். அவன், அதன் கதவைத் திறந்ததும், கீழே தரையில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டு, அதை யெடுத்து ஆவலுடன் வாசித்தான். அது மூன்றாவது அத்தியாயத்தின் இறுதியில் நாம் கூறிய கடிதமேயின்றி வேறல்ல. ராமானுஜம் அதை வாசித்ததும் வியப்புற்று, அது தன் அறைக்குள் வந்தவிதமென்னவென்று பார்க்கலானான். கடைசியில், "சரி; யாரோ திண்ணையின் வழியாய் மாடிக்கு வந்து, வராண்டாவில் நின்றவண்ணம், என் அறையின் கதவிலிருக்கும் சந்தின் வழியாக இதை உள்ளே போட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்யக் கூடியவர் யார்? இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறதே! முத்தையா செட்டியின் கொலைக்கும் மரகதவல்லியின் விவாஹத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று சிந்தித்தவண்ணம் மறுபடியும் அக்கடிதத்தை வாசித்தபடி "இது கேசவ முதலியாருடைய கையெழுத்தல்ல. மரகதத்தின் கையெழுத்துமல்ல. பிறகு இதை யார் எழுதியிருக்கமுடியும்? ஒருக்கால் இது வீண் புரளியாயிருக்குமோ? சீச்சீ! இதில் யாருக்கென்ன லாபம்? இருக்கட்டும்; எல்லாவற்றிற்கும் நான் உடனே சென்று என் தோழனைப் பார்க்கவேண்டியது அவசியம்.' என்று தீர்மானித்தான்.

ஆகவே, இதற்கு முந்திய அத்தியாயத்தில் நாம் கூறியபடி, பாலகிருஷ்ணனும் தங்கம்மாளும் பேசிக்கொண்டிருக்கையில், ராமானுஜம் அவ்வளவு அவசரத்துடன் அங்கு வந்ததற்கு இதுவே காரணம்.

பாலகிருஷ்ணன் அக்கடிதத்தை வாசித்துவிட்டு கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தான். பிறகு, தன் நண்பனைப் பார்த்து, அது அவனிடம் வந்தவழியென்னவென்று கேட்க, ராமானுஜம் எல்லாவற்றையும் விபரமாய்க் கூறினான். அதைக் கேட்ட பாலகிருஷ்ணன், திகைப்புற்று ஒன்றும் புரியாமல்,

"பேஷ்! இது மிகவும் விந்தையாயிருக்கிறது. இப்பொழுது எனக்கொன்றும் விளங்கவேயில்லை. வா; கொ

ஞ்சம் வெளியில் சென்று காற்றுவாங்கி வருவோம். பிறகு இதைப்பற்றி யோஜிப்போம்." என்றான்.

கடைசியில் அவ்விருவரும் இரவு சுமார் 7½ மணிக்கு, திரும்பி ராமானுஜத்தின் வீட்டிற்குச் சென்றார்கள். ராமானுஜம் மாடிக்குச் சென்று தன்னறையைத் திறந்து ஒரு விளக்கை ஏற்றினான். பிறகு தோழர்களிருவரும் உட்கார்ந்துகொண்டு பேசவாரம்பித்தனர். அதில் நம் பாலகிருஷ்ணன் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்திற்கு சமீபத்தில் அலமாரியொன்று இருந்தது. அதில் ஒவ்வொரு தட்டிலும் பல புஸ்தகங்கள் காணப்பட்டன. பாலகிருஷ்ணன் பேசிக்கொண்டே அவைகளை ஒவ்வொன்றாக யெடுத்துப் பார்த்தவண்ணமிருந்தான். அதில் ஒரு புஸ்தகத்திலிருந்து சில கடிதங்கள் கீழே விழுந்தன. உடனே பாலகிருஷ்ணன், குனிந்து அவைகளை யெடுத்துப் பார்க்கவே, திடுக்கிட்டான். அவனுடைய முகம் கலவரத்தாலும் ஆச்சரியத்தாலும் மாறியது. பிறகு நாலாபக்கங்களையும் கவனித்துக்கொண்டே, தாழ்ந்த குரலில்,

"ராமானுஜம்! இவைகள் இங்கு எப்படி வந்தன?" என்று பரபரப்புடன் வினவ, ராமானுஜம் வியப்புற்று, அவைகளைப் பார்த்ததும், அவனுடைய முகமும் வெளுத்து விகாரமடைந்தது. ஏனென்றால் அவைகள் நகை வியாபாரி முத்தையா செட்டியாரிடம் கடன் வாங்கியிருந்த சிலரால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டுகளாய் இருந்தன. அவைகளில் ஒன்று ராமானுஜத்தின் தந்தையால் எழுதிக்கொடுக்கப்பட்டது. அதில் அவர், முத்தையா செட்டியார் கொலைசெய்யப்பட்ட அதே தேதியில் 50 ரூபாய் வரவு வைத்திருந்தார். ஆகவே, நம் தோழர்களிருவரும் இதைப்பற்றி கலவரமடைந்தது நியாயமே. கடைசியில் பாலகிருஷ்ணன், ஒருவழியாய் தன் மனதை சமாதானப்படுத்திக்கொண்டு,

"ஏண்டா! ராமானுஜம்! இதுவரையில் நீ உன் தந்தை முத்தையா செட்டியாரிடமிருந்து கடன் வாங்கியிருப்பதாக என்னிடம் சொல்லவில்லையே." என்று வினவினான்.



ராமா.—இவ்விஷயம் எனக்கும் இப்பொழுதுதான் தெரியும். சரி; இப்பொழுது நாம் செய்யவேண்டியதென்ன?

பால.—இரு; முதலில் நாம் பேசுவதை யாராவது கவனிக்கிறார்களாவென்று பார்க்கிறேன். (என்று சொல்லிக்கொண்டே, வெளியே சென்று வராண்டாவையும் மாடிப்படிகளையும் கவனித்தான். பிறகு மறுபடி உள்ளே வந்து, கதவை உட்பக்கமாக தாளிட்டுக்கொண்டு, தாழ்ந்த குரலில்) ராமானுஜம்! நீ பெரும் ஆபத்திலிருந்து தப்பினாயென்றே சொல்லவேண்டும். இப்பத்திரங்கள் இங்கிருப்பது போலீஸாருக்குத் தெரியுமானால் நீயும் உன் தந்தையும் உடனே கைது செய்யப்படுவீர்களென்பதில் சந்தேகமே இல்லை. உனக்கு ஒரு விரோதியிருப்பது நிச்சயம். அவனே உன்மேல் முத்தையா செட்டியாரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்தும்பொருட்டு இப்படிச் செய்திருக்கவேண்டும்.

இதற்குள் ராமானுஜத்தின் கைகால்கள் நடுங்கவாரம்பித்துவிட்டன. அவன் உள்ளம் பதற, பயத்தின் மிகுதியால் பேசவும் சக்தியற்று, தன் தோழனை ஆவலுடன் உற்றுநோக்கியவண்ணமிருந்தான். அவனுடைய திகிலையும் ஆபத்தையும் நன்குணர்ந்த பாலகிருஷ்ணன்,

"நீ இனி பயப்படவேண்டாம். ஏனென்றால் அப்படியே உன் விரோதி ஒரு அநாமதேயக் கடிதத்தின்மூலம் இதைப் போலீஸாருக்குத் தெரிவித்து, அவர்கள் உன் அறையை சோதனைபோட்டபோதிலும் பாதகமில்லை. ஆனால் நாம் உன் விரோதி யாரென்பதையும், அவனிடம் இப்பத்திரங்கள் வந்த மார்க்கமென்னவென்பதையும், பிறகு, இவைகளை அவன் உன் அறையில் எப்படி ஒளித்து வைத்தானென்பதையும் கண்டுபிடிக்கவேண்டும்." என்றான். ராமானுஜம்,

"வாஸ்தவம். ஆனால் என் விரோதி யாராயிருக்கக் கூடும்?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

அது யாரென்று இப்பொழுது சொல்லமுடியாது. ஆனால் விஷயங்கள் நடந்திருப்பதிலிருந்து, உன் சந்தோஷத்தைக் கருதும் நண்பனொருவனும், உன்னை அடியுடன் ஒழிக்க நிச்சயித்திருக்கும் விரோதி ஒருவனும் உனக்குண்டென்பது வெளியாகிறது. நீ இன்று மாலை என்னிடம் காண்பித்த அநாமதேயக் கடிதத்திலிருந்து அதை எழுதியவனே உன் நண்பனென்றும், இன்னும் தற்சமயம் நீ மரகதவல்லியை விவாஹம் செய்துகொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணம் முத்தையா செட்டியாரின் கொலையே என்றும், ஊகிக்கவேண்டியிருக்கிறது.

நிற்க, இதோ நாம் கண்டுபிடித்த பத்திரங்களிலிருந்து, இவைகளை இங்கு ஒளித்துவைத்தவனே உன் விரோதியென்பதில் சந்தேகமில்லை. அவன் எக்காரணத்தாலோ, உன்னைத் தன் மார்க்கத்திலிருந்து விலக்க, இக்கார்யத்தைச் செய்திருக்கவேண்டும். அப்படி உன்னை ஒழிக்கப் பிரயத்தனப்படக்கூடியவன், இப்பொழுது அந்த அயோக்கிய சிகாமணி கோவிந்தசாமியைத் தவிர வேறு யாருமிருக்க முடியாது. இன்னும், நேற்று தன் மகளை உனக்குக் கொடுக்க சம்மதித்த டாக்டர் கேசவ முதலியார், இன்று திடீரென்று தன் தீர்மானத்தை மாற்றி தன் பெண்ணை கோவிந்தசாமிக்குக் கொடுக்க நிச்சயித்திருப்பதை கவனிக்குங்கால், எவ்விதத்திலோ கேசவ முதலியார் இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்றும், இந்த இரஹஸ்யம் எப்படியோ கோவிந்தசாமிக்குத் தெரிந்து அவன் அதைக்கொண்டு தன் மாமனை தனக்கு மரகதவல்லியை விவாஹம் செய்துகொடுக்கும்படி பலவந்தம் செய்ததுமன்றி, தற்செயலாய் இப்பத்திரங்களும் அவனிடம் சிக்கவே, உன்னை ஆபத்திற்குள்ளாக்கும்பொருட்டு, இவைகளை இங்கு ஒளித்துவைக்க ஏற்பாடு செய்திருக்கவேண்டுமென்றும் ஊகிக்கலாம். உன் தந்தை முத்தையா செட்டியார் கொலை செய்யப்பட்டதினம் இதோ வரவு வைக்கப்பட்டிருக்கும் 50 ரூபாய் பணத்தைக் கொடுக்கும்பொருட்டு அவ்வீட்டிற்குப் போயிருக்கவேண்டும். ஆனால், அக்கடை



குமாஸ்தா கிருஷ்ணய்யர் மரண விசாரணையில் உன் தந்தையின் பெயரைக் கூறுததால் அவர் அன்று இரவில் போயிருக்கவேண்டுமென்பது நிச்சயம். ஆகவே, அவருடன் நீயும் போனாயென்றும் அவ்வீட்டில் உங்களுக்குள் சண்டையுண்டாக, நீயும் உன் தந்தையுமாகச் சேர்ந்து இப்பணத்தின்பொருட்டு, செட்டியாரைக் கொலை செய்துவிட்டதாக ஏற்படக்கூடும். ஆனால், நாம் நன்றாய் ஆய்ந்தோய்ந்து பாராமல் எவ்வித தீர்மானத்துக்கும் வருவது பிசகு. எப்படியும் இப்பத்திரங்களை இங்கு ஒளித்துவைத்தவன் தானே மேற்கார்யங்களையும் செய்ய முன்வருவான். நாம் உஜாராயிருப்போமாகில், அவனைக் கண்டுபிடிக்கலாம் என்றான்.

ராமா.— இப்பத்திரங்களை இப்பொழுது நான் என்ன செய்வது ?

பால.— இவைகள் உன்னிடமிருப்பது பிசகு. ஏனென்றால் கூடியசீக்கிரம் போலீஸார் உன் வீட்டை சோதனை செய்ய வரக்கூடும். ஆகையால் நான் இவைகளை எடுத்துக்கொண்டுபோய் பிறர் கண்டுபிடிக்கமுடியாத வகையில் மறைத்துவிடுகிறேன். ஆனால் நியாயப்படி நாம் இதை உடனே போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படி நாம் செய்யும்பக்ஷத்தில் அது நமக்கே ஆபத்தாய் வந்துமுடியும். ஏனென்றால் நான் தற்சமயம் எல்லோரும் சந்தேகிக்கும் வாசுதேவனுடைய மைத்துனன். நீயோ என்னைக்காட்டிலும் ஆபத்தான நிலைமையிலிருக்கிறாய். இன்னும் நாம் இவ்விதம் இப்பத்திரங்களைக் கண்டுபிடித்தது ஒருவருக்கும் தெரியாதாகையால், நாமும் இதை இரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளுவதே உசிதம். இப்பொழுது நீ செய்யவேண்டியது என்னவென்றால், நீ வீட்டிலில்லாத சமயத்தில் உன் அறைக்குள் யாராவது கள்ளத்தனமாய் நுழைந்தார்களாவென்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

ராமா.— என்னால் முடிந்தவரையில் பார்க்கிறேன். ஆனால், அப்படிச் செய்தவன் இன்றுதான் செய்திருக்க

வேண்டும். ஏனென்றால், அப்புஸ்தகம் இன்று காலை 8 மணிக்குத்தான் என்வசம் வந்தது.

பால.—சரி; இவ்வீட்டின் மற்றொரு பாகத்திலிருக்கும் வக்கீல் நல்ல யோக்கியர்தானே?

ராமா.—சிச்சீ! அவர் பரம யோக்கியர். அதுவுமன்றி, அவர் சென்ற ஒருவாரமாக ஊரிலில்லை.

பால.—இப்பொழுது அவ்வீட்டில் இருப்பது யார் யார்?

ராமா.—அவருடைய மகளும் பிள்ளையுமிருக்கிறார்கள். அவ்விருவரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கவே முடியாது.

ராமா.—செட்டியாருடைய குமாஸ்தாக்களின் சேதி என்ன?

---

## அத்தியாயம் 5.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்து 6 தினங்கள் கழிந்துவிட்டன. அன்று மாலை சுமார் 6 மணியிருக்கும். அச்சமயம் ராமானுஜம் தன் அறையில் தன் நண்பன் பாலகிருஷ்ணனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தான்.

சற்றுநேரத்திற்கெல்லாம் பாலகிருஷ்ணனும் வந்து சேர்ந்தான். அவனுடைய முகம் கவலையால் வெளுத்துப் மாறியுமிருந்தது. அதைக்கண்ட ராமானுஜம்,

“ஏன்? ஏதேனும் விசேஷமுண்டோ?” என்று வினவினான். பாலகிருஷ்ணன்,

“விசேஷமென்ன? ஏற்கனவே போலீஸார் என் தங்கை புருஷன் வாசுதேவனை சந்தேகிக்கிறார்கள். அவன் ஓடிவிடுவானோவென்று, என் வீட்டின் சமீபத்தில் போலீஸ்காரர்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனர்?” என்று விடையளித்தான்.

ராமா.—இது நாம் எதிர்பார்த்ததே. ஆமாம்; மரண விசாரணை நாளையதினமல்லவோ நடத்தப்போவதாய்ப் பட்டது?



பால.—ஆமாம்; அதிருக்கட்டும். உன் விஷயமென்ன? அப்பத்திரங்களை உன் அறையில் ஒளித்துவைத்தது யாரென்பது வெளியாயிற்றோ?

ராமா.—இல்லை. அது இன்னும் மர்மமாகவேயிருக்கிறது.

பால.—அதை நாம் சீக்கிரம் கண்டுபிடிக்கவேண்டியது அவசியம். ஏனென்றால் அதிலிருந்து வாஸ்தவத்தில் முத்தையா செட்டியாரைக் கொன்றவன் யாரென்பது வெளியாகக்கூடும். ஆனால் நாம் அவ்விதம் அப்பத்திரங்களைக் கண்டுபிடித்துவிட்டோமென்பது அவைகளை ஒளித்துவைத்தவனுக்கு உடனே தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் போலீஸார் இதற்குள் உன் வீட்டை சோதனைசெய்ய வந்திருப்பார்கள். இவ்வீட்டிற்குள் கோவிந்தசாமியைச் சேர்ந்தவன் ஒருவன் இருக்கிறானென்பது நிச்சயம். அடடா! மறந்தேவிட்டேனே. என்னை உடனே வரும்படி சொல்லியனுப்பினாயே. என்ன விசேஷம்?

“அதுவா? இதோ பார்.” என்று சொல்லிக்கொண்டே, ராமானுஜம், தன் சட்டைப்பையிலிருந்து, ஒரு கடிதத்தை யெடுத்து, பாலகிருஷ்ணனிடம் கொடுத்தான். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

“நான், என் தந்தையின் இஷ்டத்திற்கிணங்கி, என் அத்தை மகனை விவாஹம் செய்துகொள்ள சம்மதித்து விட்டேன். ஆகையால் இக்கடிதத்தைக் கண்டதும் என்னை அடியுடன் மறந்துவிடவும். இனி எனக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. என்னைப் பார்க்கப் பிரயத்தனப்படுவதில் பிரயோஜனமில்லை.

மாகதவல்லி.”

மரகதவல்லி இவ்வளவு கண்டிப்பாய் தன் காதலனுக்குக் கடிதம் எழுதியிருப்பதைக் கண்டதும் முதலில் பாலகிருஷ்ணனுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. அப்பெண்மணி நன்றாய்ப் படித்து அதற்கேற்ற நற்குணங்களும் பெருந்தன்மையும் வாய்ந்தவளென்பதையும், அவள்

ஒரு புருஷனை அவ்வளவு தூரம் காதலித்துவிட்டு பிறகு அவனை அவ்விதம் கைவிட ஒருநாளும் இசையமாட்டாளென்பதையும், பாலகிருஷ்ணன் நன்கறிந்தவனாகையால், அக்கடிதத்தை வெறுப்புடன் கசக்கி எறிந்துவிட்டு,

"இதை அவள் எழுதினாளென்று நான் நம்பமாட்டேன்." என்றான். ராமானுஜம்,

"அதில் சந்தேகமேயில்லை. இது அவளுடைய கையெழுத்தே. அதுவுமன்றி, இன்று பிற்பகல் சுமார் 2 மணிக்கு இக்கடிதத்தை நான் வாசித்ததும், முதலில் நானும் வியப்புற்று, என் தம்பியை உடனே மரகதவல்லியிடம் அனுப்பினேன். அவள் அக்கடிதத்தை தானே எழுதியதாகவும், இனி நான் அவளைப் பார்க்கக்கூடாதென்றும் சொல்லியனுப்பிவிட்டாள். பாலகிருஷ்ணா! இதுவரையில் நான் அவளிடம் பூர்ண நம்பிக்கை வைத்திருந்தேன். அவளே என்னைக் கைவிட்டதைக் காண எனக்கொன்றும் புரியவில்லை." என்று விசனத்துடன் புலம்பவே, பாலகிருஷ்ணன், அன்புடன்,

"அசடே! வீணாய்க் கலங்காதே. அவளை அந்த அயோக்கியசிகாமணி கோவிந்தசாமி இவ்விதம் உனக்குக் கடிதம் எழுதும்படி பலவந்தம் செய்திருப்பான். இன்னும் உன் தம்பி அவளிடம் சென்றபொழுதும் அவன் அவளுடன் இருந்திருக்கவேண்டும். வா; கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருவோம்." என்று அழைத்தான். ஆனால் ராமானுஜம்,

"நீ போ. நான் வரவில்லை." என்று விடையளிக்கவே, பாலகிருஷ்ணன்,

"பைத்தியமே! இதற்காக நீ இப்படி வருத்தப்படுவது சரியல்ல. நீ வாஸ்தவத்தில் மரகதவல்லியைக் காதலிக்கும்பக்ஷத்தில், முத்தையா செட்டியாரைக் கொன்றவன் யாரென்பதை சீக்கிரம் கண்டுபிடிக்கவேண்டும். இப்படி பிரமித்து, ஏற்கனவே பெண்டாட்டியைப் பறிகொடுத்தவன்போல், உட்கார்ந்துகொண்டிருப்பதில் பிர



யோஜனமில்லை. வா; போவோம்." என்று மறுபடியும் வற்புறுத்தினான். ராமானுஜம் அரைமனதுடன் சம்மதித்தான். பிறகு தோழர்களிருவரும் வெளியே சென்றார்கள்.

சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்விருவரும் அவ்வீதியைக் கடந்து, போலீஸ்டேஷனுக்கருகாமையில் வந்தபொழுது, அங்கு இன்ஸ்பெக்டர் சபேசய்யர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், பாலகிருஷ்ணன் அவருக்கு மரியாதையுடன் வந்தனமளித்தான். சபேசய்யரும், புன்சிரிப்புடன்,

"என்னப்பா! என்ன விசேஷம்?" என்றார்.

சபேசய்யருக்கு பாலகிருஷ்ணனை நன்றாய்த் தெரியும். அவர், பலதரம், அவனுடைய சுறுசுறுப்பையும் புத்திகூர்மையையும் கண்டு, மெச்சியிருக்கிறாராகையால், அவ்வாலிபன் அவருடன் தாராளமாய்ப் பேசுவதுண்டு. அவன், மரியாதையுடன்,

"இன்ஸ்பெக்டர்வாள்! நான் மிகவும் தாழ்மையுடன் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லிக்கொள்ளவேண்டும்." என்று சொல்லவே, சபேசய்யர், வியப்புற்று,

"ஏன்? என்ன வேண்டும்?" என்று பிரியத்துடன் வினவினார்.

பால.—ஸ்வாமி! என் தங்கை புருஷன் சீக்கிரம் கைது செய்யப்படுவானென்பது எனக்குத் தெரியும். ஆகவே, அதைச் செய்யும்பொழுது, வீண் குழப்பமும் சந்தடியுமின்றி, இரகஸ்யமாய் நீங்கள் செய்வீர்களானால், நாங்கள் மிகவும் நன்றியறிவுள்ளவர்களாயிருப்போம். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அவனை எங்களுடைய வீட்டில் கண்டுபிடிக்கலாம். அவன் இதற்குப் பயந்து ஓடமாட்டானென்பதற்கு நானும் என் தந்தையும் ஜவாப்தாரி.

சபே.— ஆனால் அவனை கைது செய்யவேண்டியது அவசியமென்று தோன்றுகிறதோ?

பால.—அவசியமென்றே நினைக்கிறேன்.

சபே.—ஏன் ?

பால.—ஸ்வாமி ! நீங்கள் என்னைப் பரீக்ஷை செய்கிறீர்கள். அன்று நடந்த மரண விசாரணையிலிருந்து, முத்தையா செட்டியாருக்கும் என் தங்கை புருஷனுக்கும் வெகு நாளாய் மனஸ்தாபமுண்டென்றும், கொலை நடந்த இரவு அவ்விருவருக்கும் அடிதடி நடந்ததென்றும் வெளியாயிருக்கிறது. இதைத்தவிர அவனைக் கைது செய்ய மற்றொரு காரணமுமுண்டு.

சபே.—என்ன ?

பால.—அதைச் சொல்ல நான் தயங்குகிறேன். ஏனென்றால் அதைக் கேட்டதும் நான் ஒரு அதிகப்பிரசங்கி என்று நீங்கள் நினைக்கலாம்.

சபே.—(தட்டிக்கொடுத்து) அசடே ! அப்படியொன்றும் நினைக்கமாட்டேன். உன் மனதிலிருப்பதைச் சொல்லு.

பால.—(வினயத்துடன்) முத்தையா செட்டியாரைக் கொன்றவன் என் தங்கை புருஷனல்லவென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அக்கார்யத்தைச் செய்தவன் லேசானவனல்ல. அவன் மிகவும் தந்திரசாலியாயிருக்கக்கூடும். ஆகவே, என் தங்கை புருஷன் இப்பொழுது கைது செய்யப்படுவானாகில், வாஸ்தவத்தில் இதைச் செய்தவன், இனி நாம் தப்பினோமென்று தைர்யமடைவான். அதன்பலனாய் நாம் அவனைப் பிடிப்பது மேலும் எளிதாகும்.

சபே.—சபாஷ். அதிருக்கட்டும் ; இப்பொழுது உன் தங்கை புருஷனைக் காப்பாற்றும்பொருட்டு, நீ சொன்ன அந்த கொலைபாதகனைக் கண்டுபிடிக்க நீயும் முயற்சிப்பாயென்று நினைக்கிறேன்.

பால.—ஸ்வாமி ! அச்சண்டாளனைக் கண்டுபிடிக்காமல் விடுவதில்லையென்று நான் சபதஞ் செய்துகொண்டிருப்பது வாஸ்தவம். ஆனால் நான் அப்படிச் செய்ததற்குக் காரணம் எனக்குப் போலீஸாரிடம் நம்பிக்கையில்லையென்பதல்ல. அதுவும் நீங்கள் இம்மர்மத்தைக் கண்டுபிடிக்காமலிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். இருந்தபோதிலும், என் முயற்சியின் பலனாய் நான் உங்களுக்கு எவ்விதத்திலாவது சாதகமாயிருக்கக்கூடுமானால் மிகவும் சந்தோஷப்படுவேன்.



சபே.—அப்பா ! நீ இவ்விதம் சபதம் செய்துகொண்டதில் எனக்கொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் இது மிகவும் ஆபத்தான கார்யமாகையால் நீ மிகவும் உஜாராயிருக்கவேண்டும். சரி ; நேரமாகிறது. நீ எதற்கும் கவலைப்படவேண்டாம். (என்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.)

பிறகு, தோழர்களிருவரும் சமீபத்திலிருந்த ஒரு தோட்டத்திற்குள் நுழைந்து ஒரு ஆஸனத்திலுட்கார்ந்துகொண்டு பேசவாரம்பித்தனர். ஆனால் சற்றுநேரத்திற்கெல்லாம், சமீபத்தில் யாரோ பரிஹாஸமாய் கலகலவென்று நகைக்கும் சப்தம் கேட்கவே, அவ்விருவரும் திரும்பிப் பார்த்தபொழுது, பக்கத்தில் டாக்டர் கேசவ முதலியாருடைய தமக்கை மகன் கோவிந்தசாமியும் அவனுடைய தோழன் கிட்டுவும் உட்கார்ந்துகொண்டு, தங்களை யுற்றுநோக்கியவண்ணம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே ராமானுஜத்தின் கண்களில் கோபாக்கினி ஜ்வலித்தது. இன்னும், கோவிந்தசாமி தன்னைப் பார்த்தே அவ்விதம் சிரித்தான் என்பதை யறிந்துகொள்ளவே, தன் கோபத்தை யடக்கமுடியாமல், எழுந்து கோவிந்தசாமியிடம் சென்று,

“ ஏண்டா ! நீ அப்படி எதற்காக சிரித்தாய்?” என்று வினவினான்.

“ அதன் காரணத்தை நான் உனக்குச் சொல்லவேண்டியது அவசியமில்லை.” என்று கோவிந்தசாமி இறுமாப்புடன் விடையளித்தான்.

ராமா.—நீ என்னைப் பார்த்தே அப்படிச் சிரித்தாயென்பது எனக்குத் தெரியும்.

கோவி.—நான் உன்னை பரிஹஸிக்கவில்லை.

ராமா.—அப்படியானால் நீ சிரித்ததற்குக் காரணமென்ன?

கோவி.—அதற்குக் காரணமில்லை.

ராமா.—காரணமில்லாமல் பைத்தியங்களல்லவோ சிரிக்கும்?

கோவி.—சிச்சீ! வாயை மூடு. அதிகமாய் பேசினால் உன் பற்களை யுடைத்துவிடுவேன்.

ராமா.—அடே! உன் தைர்யமெல்லாம், உன் வாயிலே யொழிய, கைகளிலில்லை என்பது எனக்குத் தெரியும். கொஞ்சம் அடக்கிப் பேசு.

கோவி.—அடக்காவிட்டாலோ?

ராமா.—அடக்காவிட்டால், நீ தாசி மாணிக்கத்தின் வீட்டில் சீட்டாடும்பொழுது, போக்கிரித்தனம் செய்ததற்காக, வாங்கிய உதைகளைக்காட்டிலும் அதிகம் வாங்குவாய்.

இதைக் கேட்டதும் கோவிந்தசாமியின் முகம் வெளுத்தது. ஆனால் மறுவினாடி கோபத்தினால் சிவந்தது. அவன் உடனே தன்னிடத்திலிருந்து ஓரே தாவலாய்த் தாவி நின்று, ராமானுஜத்தின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு,

"மட்டி நாயே! நீ உடனே மன்னிப்புக் கேட்காவிட்டால் இதோ உன் நாக்கை அறுத்துவிடுவேன். சீக்கிரம்." என்று துரிதப்படுத்தவே, ராமானுஜம் சாந்தமாய் ஏதோ விடையளிக்குந்தருவாயிலிருந்தான். ஆனால், அச்சமயம், அதுவரையில் தூரத்திலிருந்தே அவர்களுடைய சம்பாஷணையைக் கவனித்துக்கொண்டிருந்த பாலகிருஷ்ணன் அவர்களை அணுகி, கோவிந்தசாமியை கடுமையான பார்வையுடன் நோக்கியவண்ணம்,

"அடே ஆண் சிங்கமே! எங்கே அவனுடைய நாக்கை அறு பார்ப்போம். சீச்சீ! மிருகமே! நீ உடனே அவனுடைய கைகளை விடாவிட்டால், வீணாய் இங்கு



அவமானப்படுவாய்." என்று உறுதியுடன் கூறவே, கோவிந்தசாமி நடுங்கிவிட்டான். இதற்குள் அவனுடைய தோழன் கிட்டு நழுவிவிட்டானாகையால், தான் அவர்களை எதிர்ப்பது முடியாத கார்யமென்பதை யுணர்ந்து, ராமானுஜத்தின் கரங்களை விட்டுவிட்டு,

"சரிதான்; நான் மரகதவல்லியை விவாஹம் செய்துகொள்ளப் போகிறேனென்ற பொறாமையால் நீங்கள் இருவரும் என்னை வம்புச் சண்டைக்கு இழுக்கிறீர்கள்." என்றான்.

ராமா. சிச்சீ! பைத்தியமே! எனக்கு அந்தக் கவலை இல்லவேயில்லை. ஏனென்றால் நீ அவளை விவாஹம் செய்துகொண்டாலல்லவோ அது நிச்சயம்."

கோவி.—ஓஹோ! ஆனால் எங்களுடைய விவாஹத்தைக் கலைத்துவிடலாமென்று நினைக்கிறாயோ?

ராமா.—அந்த உத்தேசமும் எனக்கில்லை. ஏனென்றால் பெண்திலகமாகிய மரகதவல்லியை கேவலம் மிருகமாகிய நீ கட்டிக்கொள்ள தெய்வம் சம்மதிக்காது.

கோவி.—டேய்! இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். நீ மறுபடியும் என்னைத் திட்டினால்—

கோவிந்தசாமி தன் பேச்சை முடிப்பதற்குள் பாலகிருஷ்ணன் அவனைத் தடுத்து, "டேய்! நீ மரகதவல்லியை விவாஹம் செய்துகொள்ள தெய்வம் சம்மதிக்காதென்பதுடன்கூட உன் விஷயங்கள் முழுமையும் உன் மாமன் கேசவ முதலியாருக்குத் தெரியுமானால் அவரும் இதற்கு இணங்கமாட்டாரென்பது நிச்சயம். மைனர் கோவிந்தசாமி முதலியார்வாள்! உம்முடைய விஷயங்களெல்லாம் எனக்குத் தெரியும். நானும் இன்றிரவு கேசவ முதலியாரைப் பார்க்கிறேன்." என்றான்.

கோவி.—ஓஹோ! அப்படியா? நீ குசாலாய் உன்னால் முடிந்தவரையில் பார். ஆனால் உன்னால் இந்த விவாஹத்தை நிறுத்தமுடியாது.

பால.—பேஷ்! அடே! இங்கே பார். நீ முதல் நம்பர் ஜேவாளியென்பதும், பரம அயோக்கியனென்பதும், இவ்வூரில் எல்லோருக்கும் தெரியும். ஆகவே, இது கேசவ முதலியாருக்கும் தெரிந்திருக்கவேண்டும். அப்படித் தெரிந்தும், அவர் தன் அருமை மகளை உனக்கு தத்தம் செய்யவேண்டுமானால், அதற்குக் காரணம் இதுவே. அதாவது எவ்விதத்திலோ அவர் உன்னிடம் மாட்டிக்கொண்டிருக்கிறார். நீ அதைக் கொண்டு, அவரை பயமுறுத்தி, மரகதவல்லியை உனக்குக்கொடுக்கும்படி பலவந்தம் செய்திருக்கிறாய். அடே! பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான். கொஞ்சம் உஜாராயிரு. (என்று கூறிவிட்டு, திரும்பி தன் நண்பனைத் தொட்டு, 'ராமானுஜம்! வா; போவோம். நாம் இவனுடன் பேசுவதே பிசகு.' என்று அழைத்துக்கொண்டு போய்விட்டான்.)

* * * * *

கடைசியில் பாலகிருஷ்ணன் அன்று இரவு தன் வீட்டிற்குச் சென்றபொழுது மணி சுமார் 8 இருக்கும். அவன் டாக்டர் கேசவ முதலியாரையும் முடியுமானால் மரகதவல்லியையும் கண்டு பேசுமெண்ணத்துடன், சிக்கிரம் தன் போஜனத்தை முடித்துக்கொண்டு, கேசவ முதலியாருடைய வீட்டிற்குச் சென்றபொழுது, அதில் அவரில்லையென்பதையும் மரகதவல்லி தனிமையிலிருப்பதையும் தெரிந்துகொண்டு, என்ன செய்வதென்று புரியாமல், கொஞ்ச நேரம் தயங்கியவாறு நின்றுகொண்டிருந்தான். ஆனால் அவன் அவ்விதம் தன் வீட்டிற்குள் நுழைந்ததையும், பிறகு வெளியே சென்றதையும் பின்கட்டிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த மரகதவல்லி வெளியே வந்தாள். அவளுக்கு பாலகிருஷ்ணனும் ராமானுஜமும் இணையற்ற தோழர்களென்பது தெரியுமாகையால், அவன் தன் காதலனைப்பற்றியே பேசும்பொருட்டு வந்திருக்கவேண்டுமென்பதை ஊகித்து, நாணத்துடனும் ஆவலுடனும் என்ன வேண்டுமென்று பாலகிருஷ்ணனைக் கேட்க, அவன், மிகவும் மரியாதையுடன்,



"அம்மா! நான் உன் தந்தையைப் பார்க்கும்பொருட்டு வந்தேன். இன்னும், நீ என்னை உன் தமையனென்று நினைத்து, என்னுடன் பேசுவாயாகில் நான் உன்னிடமும் பேசவேண்டியது கொஞ்சமுண்டு." என்றான்.

மரகதம்.—ஏன்? என்ன வேண்டும்?

பால.—நீ இன்று ராமானுஜத்துக்கு எழுதிய கடிதத்தை நானும் பார்த்தேன்.

இதைக் கேட்டதும் அப்பெண்மணி திடுக்கிட்டாள். உடனே, அவளுடைய முகம் மாறி, கண்களில் நீர் தளும்பியது.

மரகதம்.—அதை அவர் உங்களிடம் காண்பிப்பாரென்று நான் எதிர்பார்க்கவில்லை.

பால.—அம்மா! அதைப் பார்த்ததுமுதற்கொண்டு, அவனுடைய நிலைமை மிகவும் பரிதாபப்படத்தக்கதாய் இருக்கிறது. அவன் தற்கொலையும் செய்துகொண்டு விடுவானோவென்று பயப்படுகிறேன். இன்னும் நான் அவனை என் சகோதரனென்றே மதித்துவருகிறேனென்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே, அவன் தன் வருத்தத்தை என்னிடம் வெளியிட்டதை நீ தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

தன் காதலனுடைய பரிதாப நிலைமையைக் கேட்டதும், அப்பெண்மணியின் நேத்திரங்களிலிருந்து கண்ணீர் பிரவாகமாய்க் கொட்டவாரம்பித்தது. அவள், எவ்வளவோ முயன்றும், தன் துக்கத்தையும் தடுமாற்றத்தையும் மறைக்க முடியவில்லை. கொஞ்சநேரம் பேசச் சக்தியற்றவள்போல் தரையையுற்றுநோக்கியவண்ணம் இருந்தாள். அவளுடைய மனோநிலைமையைக் கண்டறிந்த பாலகிருஷ்ணன், அன்புடன்,

"அம்மா! நீ இன்னும் என் நண்பனைக் காதலிக்கிறாயென்பது நிச்சயம்." என்று கூறவே, மரகதவல்லி, தடுமாற்றத்துடன்,

"நான் இதைப்பற்றி உங்களுடன் பேசுவது சரியல்ல. ஆனாலும் என் மனதிலிருப்பதை அடக்கிவைத்துக்கொண்டிருப்பதால் நான் அனுபவித்துவரும் கஷ்டத்திற்களவில்லை. இதுவுமன்றி, நீங்கள் அவருடைய க்ஷேமத்திலும் சந்தோஷத்திலும் எவ்வளவுதூரம் நாட்டமுள்ளவரென்பதை நான் அறிவேனாகையால், அதை நான் உங்களிடம் வெளியிடுவதில் பிசகில்லையென்று நினைக்கிறேன். தற்சமயம் அவருடைய ஸ்திதி பரிதாபப்படத்தக்கதானால் நான்மட்டும் சந்தோஷத்துடனும் மனோநிம்மதியுடனுமிருப்பதாக நீங்கள் நினைக்கவேண்டாம். இனி, என் ஜன்மத்தில் சந்தோஷமென்பதேயில்லையென்பது என்னைப் படைத்த ஈச்வரனுக்குத்தான் தெரியும். இன்னும்—" என்று பேசிக்கொண்டேயிருந்தவள், திடுக்கிட்டு, தன் பேச்சை அப்படியே நிறுத்தி, உள்ளே ஓடி மறைந்துவிட்டாள். அதற்குக் காரணம், அச்சமயம், கொஞ்சதூரத்தில், மைனர் கோவிந்தசாமியின் பேச்சுக் குரல் கேட்டது.

மறுநிமிஷம் அங்குவந்த கோவிந்தசாமி, பாலகிருஷ்ணன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், மிகவும் இறுமாப்புடன்,

"ஏண்டா! உனக்கு இங்கு என்ன வேலை?" என்று வினவ, பாலகிருஷ்ணன், அமைதியுடன்,

"நான் கேசவ முதலியாரைப் பார்க்கும்பொருட்டு வந்தேன்." என்று விடையளித்தான்.

**கோவி.**—அவர் வீட்டிலில்லை. அவர் டவுன் ஹாலிலிருக்கிறார்.

பால.—அவர் வீட்டிலில்லையென்பது எனக்குத் தெரியும்.

**கோவி.**—அப்படியானால், இதுவரையில் நீ இங்கு யாருடன் பேசிக்கொண்டிருந்தாய்?

பால.—அதை நீ கேட்கவேண்டியது அவசியமில்லை.

**கோவி.**—ஓஹோ! அப்படியா? அடே! நீ மரகதவல்லியுடன் பேசிக்கொண்டிருந்தாயென்பது நிச்சயம். நான் மற்றொருதரம் நீ அவளுடன் இப்படி பேசுவதைக் காண்பேனாகில், உன் கழுத்தை முறித்துவிடுவேன். இருக்கட்டும்; அந்த முண்டைக்கு இதோ வழி சொல்லுகிறேன். (என்று பயங்கரமாய் உறுமிக்கொண்டே அட்டஹாஸத்துடன் உள்ளே சென்றான்.)



நிற்க, மரகதவல்லி, உள்ளம் பதற, கலவரப் பார்வையுடன், தன் அறைக்குள் பதுங்கிக்கொண்டிருந்தாள். மறுநிமிஷம் அதற்குள் கோபாவேசத்துடன் நுழைந்த கோவிந்தசாமி,

"அடியே! நீ இதுவரையில் தனிமையில் அந்த செட்டிப்பயலுடன் பேசிக்கொண்டிருந்தாயென்பது எனக்குத் தெரியும்." என்றான்.

**மரகதம்.**—வாஸ்தவம். ஆனால் அதில் யாதொரு குற்றமுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

**கோவி.**—ஓஹோ! அப்படியா? அடியே! நான் சொல்லுவதைக் கவனி. நீ இவ்விதம் கண்ட தடியன்களுடன் பேசுவதில் எனக்கிஷ்டமில்லை.

**மரகதம்.**—நான் அவரை என் தமயனென்று நினைத்துப் பேசினேன். அவரும் என்னைத் தன் தங்கையென்றே நினைத்தாரென்பதில் சந்தேகமில்லை. இன்னும் நான் அச்சமயம் உங்களுடைய இஷ்டத்தைக் கவனிக்கவில்லை.

**கோவி.**—அதற்கு அர்த்தம் நீ என்னுடைய இஷ்டத்தைக் கவனிக்கவேண்டியது அவசியமில்லையென்பதோ?

**மரகதம்.**—இக்கேள்வியை நீங்கள் கேட்காமலிருப்பது நலம்.

**கோவி.**—(அடக்க இயலாத கோபத்துடன்) அடியே! மறுபடியும் சொல்லுகிறேன். இனிமேல் நீ ஒருவனுடனும் பேசக்கூடாது.

**மரகதம்.**—(கம்பீரத்துடன்) இப்போர்ப்பட்ட கட்டளையிட உங்களுக்கு இப்பொழுது அதிகாரமில்லை.

கோவி.—என்ன சொன்னாய்? ஏண்டி! நீ கூடியசீக்கிரம் என் மனைவியாகப் போகிறாயென்பதை மறந்துவிட்டாயோ?

மரகதம்.- இல்லை. நான் உங்களுடைய மனைவியானதும் உங்களுக்கு எவ்விதத்திலும் கீழ்ப்படிந்து நடக்க நான் தயார். ஆனால் அதுவரையில் நான் என்னிஷ்டப்படி நடப்பதைத் தடுக்க உங்களுக்கு பாத்தியமில்லை.

கோவி.—(கண்களில் தீ பறக்க) அடியே! நீ பலே ஆட்டு வாணி போலிருக்கி—

மரகதம்.—அத்தான்! கண்டபடி பேசி மரியாதையைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். நீர் மற்றொருதரம் அவ்வார்த்தையை உபயோகிப்பீரானால், நான் என்ன செய்வேனென்பது எனக்குத் தெரியாது. சரி; எட்டி நில்லும். (என்று சொல்லிக்கொண்டே, அவ்வறையைவிட்டுப் போக முயன்றாள்.)

இதற்குள் கோவிந்தசாமியின் கரங்கள் கோபவெறியினால் துடித்துக்கொண்டிருந்தன. அவன் அப்பெண்மணியை வழிமறித்து,

"அடியே! என்னை பயமுறுத்தவும் உனக்குத் தைரியமுண்டோ?" என்று சீறியவண்ணம், அவளுடைய கரங்களைப் பிடிக்கவே, அவள், அவைகளை அப்படியே உதறித்தள்ளிவிட்டு, சொல்லொணா வெறுப்புடனும் சினத்துடனும்,

"நீர் என்னை மறுதரம் தொட்டால் கூச்சலிடுவேன். உம்மைப்போன்ற மிருகங்களுடன் பெண்கள் தனிமையிலிருப்பது பிசகு." என்று சொல்லிக்கொண்டே வெளியே செல்ல, கோவிந்தசாமி,

"அடியே! நான் அந்த செட்டிப்பயலுக்கும் கேடு கெட்டவனா?" என்று கோபத்தில் தன்னைத்தானே மறந்தவனாய், பாய்ந்து, மரகதவல்லியின் கரங்களை மறுபடியும் பற்றிக்கொண்டு, அவைகளை இரக்கமின்றி அப்படியும்



இப்படியும் முறுக்கவே, அப்பெண்மணி, தீயில் விழுந்த புழுவைப்போல், தன் சரீரத்தை நெளித்துக்கொண்டு,

"அத்தான்! வேண்டாம். வேண்டாம். நீர் செய்வது சுத்த அக்கிரமம். வேண்டாம். உடனே என்னை விட்டுவிடும்." என்று கெஞ்சினாள். அவள், தான் கூச்சலிடும் பக்ஷத்தில் தெருவில் போகும் ஜனங்கள் அதைக் கேட்டு உள்ளே வரக்கூடுமென்றும், அதன் பலனாய்த் தன்னைப்பற்றி கண்டபடி பேசக்கூடுமென்றும், இன்னும் பல காரணங்களை யுத்தேசித்தும், தன் கோபத்தை யடக்கி வந்தாள். ஆனால் அதை யறியாத கோவிந்தசாமி, அவள் தன்னிடம் பயப்படுகிறாளென்று நினைத்து, மேலும் அதிகாரத் துவனியில்,

"நீ அவனுடன் பேசியது பிசகென்று ஒப்புக்கொள்." என்று கூறியவண்ணம், மறுபடியும் தான் பிடித்துக்கொண்டிருந்த அப்பெண்மணியின் கரங்களை முறுக்கவே, அவள், கோபம் தாங்காமல்,

"சீ! சண்டாளா! உன்னுடன் நான் தனிமையில் பேசுவது பிசகேயொழிய, அவருடன் பேசியதில் யாதொரு பிசகுமில்லை." என்று விடையளிக்கவே, கோவிந்தசாமி, முன்பின் யோசியாமல், திடீரென்று அவளுடைய கன்னத்தில் 'பளீ'ரென்று அறைந்துவிட்டான். உடனே வலி பொறுக்கமாட்டாமல் அப்பெண்பாவை "ஐயோ!" என்று வீரிட்டலறினாள்.

அதே சமயம், அவ்விடத்தை நோக்கி யாரோ ஓடிவரும் சப்தம் கேட்கவே, கோவிந்தசாமி அவளை விட்டுவிட்டு, திரும்பிப் பார்க்க, தன்னெதிரில் நம் பாலகிருஷ்ணன் நிற்பதைக் காணவே, அவனுடைய முகம் வெளுத்தது. பாலகிருஷ்ணனுடைய கண்களில் கோபமும் தீர்மானமும் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அவன், கம்பீரத்துடன்,

"அடே! நீ அவளை யடிக்க உனக்கென்ன பாத்தியம்?" என்று வினவ, கோவிந்தசாமி, தன் சுபாவப்படி, இறுமாப்புடன்,

"அடே! இதில் தலையிட உனக்கென்ன அதிகாரம்." என்றான்.

பாலகிருஷ்ணனுடைய கோபம் இதைக் கேட்டதும் ஜ்வாலை விட்டெரிந்தது. அவன்,

"உன்னைப்போல் சிறிதும் வெட்கமின்றி பெண்களை ஹிம்ஸிக்கும் சண்டாளர்களைக் கண்டிக்க ஆணாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அதிகாரமுண்டு. நீ உடனே அப்பெண்மணியிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்." என்று கூறவே, கோவிந்தசாமி, பரிஹாஸமாய்ச் சிரித்துவிட்டு,

"ஓஹோ! அப்படியா? நான் கேட்காவிட்டாலோ?" என்று வினவினான்.

"சீச்சீ! மிருகமே! கேட்காவிட்டால் இதோ பார்." என்று பாலகிருஷ்ணன் குபீரென்று பாய்ந்து கோவிந்தசாமியின் குடுமியைப்பற்றி அவனுடைய முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்து, வேகமாய்ப் பிடித்துத் தள்ளவே, கோவிந்தசாமி போய் மூட்டைபோல் மரகதவல்லியின் பாதங்களில் விழுந்தான். இன்னும், அவன் எழுந்திருக்குமுன், பாலகிருஷ்ணன் ஓடி, அவனுடைய முதுகின்மீது ஏறியுட்கார்ந்துகொண்டு, அவனுடைய குடுமியை மறுபடியும் பற்றி, அதை அப்படியும் இப்படியும் குலுக்கியவண்ணம், "உடனே அவளுடைய மன்னிப்பைக் கேள்." என்று துரிதப்படுத்தவே, கோவிந்தசாமி, வலிபொறுக்க முடியாமல்,

"நான் செய்தது பிசகு. நான் செய்தது பிசகு." என்று கதறினான்.

---

## அத்தியாயம் 6.

மறுநாட்காலை 11 மணிக்கு, ஒத்திப்போடப்பட்ட மூத்தையா செட்டியாரின் மரண விசாரணை துவக்கமாயிற்று. அன்றும் அதுநடந்தயிடத்தில் ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருந்தனர்.



முதலில், கொலை நடந்ததினம் மூத்தையா செட்டியாரைக் கண்டு பேசிய சிலர் விசாரிக்கப்பட்டனர். பிறகு வாசுதேவன் அழைக்கப்பட்டான். அவ்வாலிபனுடைய முகம் கவலை, வருத்தம், பலஹீனம் இவைகளால் வெளுத்து வாடியிருந்தது. அவனைக் கண்டதும், அங்கிருந்த எல்லோருடைய மனதிலும், ஒருக்காலும் அவன் அப்பேர்ப்பட்ட கொடுங் கார்யத்தைச் செய்திருக்கமாட்டானென்ற நம்பிக்கையும், ஆனாலும் அச்சமயம் அவன் பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறானென்ற காரணத்தால் அளவற்ற அநுதாபமும் ஏற்பட்டன. பிறகு, வாசுதேவனும் தன்னுடைய நிலைமையை அறியாதவனல்ல. ஆனபோதிலும், அவன் பேசியபொழுது, களங்கமற்ற தன் சுபாவத்தை யெடுத்துக்காட்டும் கம்பீரத்துவனியில் பேசவாரம்பித்தான். அவனை மரண விசாரணைத் தலைவராகிய சுந்தரம் பிள்ளையும் மிகவும் மரியாதையுடன் விசாரித்தார்.

சுந்த.—நீர் கடைசியாக உம் தந்தையை உயிருடன் பார்த்தது எப்பொழுது?

வாசு.—கொலை நடந்ததினம் இரவு சுமார் 8 மணிக்குப் பார்த்தேன்.

சுந்த.—உமக்கும் அவருக்கும் மனஸ்தாபமுண்டென்பது வாஸ்தவமா?

வாசு.—வாஸ்தவம்.

சுந்த.—உங்களுடைய மனஸ்தாபத்துக்குக் காரணமென்ன?

சுந்தரம் பிள்ளை இக்கேள்வியைக் கேட்டதும், அவருடனிருந்த ஜூரர்களில் ஒருவர் அதைக் கேட்கவேண்டியது அவசியமில்லையென்று ஆக்ஷேபித்தார். ஆனால் வாசுதேவன், சிறிதும் தயக்கமின்றி, உள்ள விஷயத்தை சுருக்கமாய்ச் சொல்லிமுடித்தான்.

சுந்த.—சரி; உங்களிருவருக்கும் அன்று இரவு அடிதடி நடந்தது வாஸ்தவமா?

வாசு.—அடிதடி நடந்தது வாஸ்தவம். ஆனால் அடித்தவர் அவரேயொழிய நானல்ல?

சுந்த.—நீர், உம் தந்தையைப் பார்த்து, 'நீர் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே நலம். உம்மால் உலகத்துக்குத் தீமையேயொழிய சிறிதும் நன்மையில்லை.' என்று சொன்னதுண்டா?

வாசு.—கோபத்தில் சொல்லியிருக்கலாம். இப்பொழுது ஞாபகமில்லை.

சுந்த.—சரி; அவர் உம்மை அடித்ததும் நீர் என்ன செய்தீர்?

வாசு.—அவர் அப்படி அடித்தது பிசகென்பதை அவருக்கு எடுத்துக்காட்ட முயன்றேன். ஆனால் வரவர அவருடைய கோபம் அதிகரிக்கவே, அச்சமயம் அவருடன் மேலும் பேசுவது பிசகென நினைத்து, வெளியே வந்துவிட்டேன்.

சுந்த.—அது நடந்தபொழுது அவ்வீட்டில் வேறு யாரிருந்தார்கள்?

வாசு.—ஒருவருமில்லை. நான் உள்ளே சென்றதும் என் தந்தை தன் சமயற்காரனை போகச் சொல்லிவிட்டார்.

சுந்த.—நீர் அவ்வீட்டைவிட்டு வெளியே வந்தபொழுது மணி என்ன?

வாசு.—9 மணிக்கு மேலிருக்கமுடியாது.

சுந்த.—நீர் வெளியே வந்ததை யாராவது பார்த்தாருண்டா?

வாசு.—அதை நான் கவனிக்கவில்லை.

சுந்த.—சரி; நீர் உம்முடைய மாமனாருடைய வீட்டிற்குத் திரும்பிப்போனபொழுது மணி என்ன?

வாசு.—12க்கு மேலிருக்கும்.

சுந்த.—ஆனால் 9 மணியிலிருந்து 12 மணிவரையில் என்ன செய்தீர்?



வாசு.—அவ்வீட்டைவிட்டு வெளியே வந்ததும், என்னைப் பெற்று வளர்த்த என் தந்தையே என்னை அவனிதம், பணத்தின்பொருட்டு, அவமானப்படுத்திய வருத்தத்தாலும், இன்னும் அவர் என்னை தன் தடியால் ஓங்கி என் நெற்றியில் அடித்துவிட்டதால், கொஞ்சதூரம் நடந்ததும் என் தலை சுயளவே, மேலே நடக்கமுடியாமலும், பக்கத்திலிருந்த ஒரு தோட்டத்திற்குள் சென்று உட்கார்ந்துகொண்டேன். பிறகு சிந்தனையிலாழ்ந்துவிட்டதால், அகாலமானதையும் கவனிக்கவில்லை. கடைசியில் சமீபத்தில் எங்கோ மணி 12 அடிக்கும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டு வீட்டிற்குச் சென்றேன்.

சுந்த.—ஆகவே, நீர் 9 மணியிலிருந்து 12 மணிவரையில் அத்தோட்டத்திலிருந்தீர்?

வாசு.—ஆமாம்.

சுந்த.—இதை உம்மால் ரூபிக்கமுடியுமா?

வாசு.—அப்பொழுது இதை ரூபிக்கவேண்டிய அவசியமிருக்குமென்பது எனக்குத் தெரியாதிருக்கையால், நான் அப்படி உட்கார்ந்துகொண்டிருப்பதை யாராவது கவனிக்கிறார்களாவென்பதை நான் பார்க்கவில்லை. எனவே, என்னை யாராவது பார்த்திருந்து, அவர்கள் என் நிலைமையை யுணர்ந்து, அவர்களாக முன்வந்து, என்னைக் காப்பாற்றினாலுண்டேயொழிய, இதை வேறு விதத்தில் ரூபிக்க நான் சக்தியற்றவனாயிருக்கிறேன்.

பிறகு, ராமலிங்கம் என்ற ஒருவன் அழைக்கப்பட்டான். அவன் கொலை நடந்த இரவு $11\frac{1}{4}$ மணிக்கு, தான் 8 நம்பர் வீதிவழியாய் வந்துகொண்டிருந்ததாகவும், பிறகு முத்தையா செட்டியாருடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, அதிலிருந்து ஒருவன் வெளியே வந்து, பயந்தவன்போல் இருதிசைகளையும் பார்த்துக்கொண்டே 7 நம்பர் வீதியை நோக்கி வேகமாய்ப் போவதைப் பார்த்ததாக

வும், உடனே தன் மனதில் சந்தேகம் தோன்றவே, அவனைப் பின்பற்றிச் சென்று, கொஞ்சதூரத்திலிருந்த ஒரு விளக்கு வெளிச்சத்தில் அவனுடைய முகத்தைக் கவனிக்க, அது கலவரத்தாலும் அதைர்யத்தாலும் விகாரமாயிருந்ததாகவும் கூறினான்.

இதைக்கேட்டதும், அங்கிருந்த ஜனங்களெல்லோரும் வியப்புற்று நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டனர். சுந்தரம் பிள்ளை சாக்ஷியை பல கேள்விகள் கேட்டார்.

சுந்த.—நீர் இதுவரையில் ஏன் சும்மாயிருந்தீர்? கொலை நடந்த மறுதினம் நடந்த விசாரணைக்கு ஏன் வரவில்லை?

சாக்ஷி. கொலை நடந்த விஷயம் எனக்கு இன்றுதான் தெரியும். ஏனென்றால் கொலை வெளியாகுமுன் நான் $5\frac{1}{2}$ மணி வண்டியில் வெளியூர் செல்ல நேரிட்டது. இன்றுதான் திரும்பிவந்தேன். வந்ததும், முத்தையா செட்டியார் கொலை செய்யப்பட்டதை யறிந்ததும், நான் அன்று கண்ட விஷயத்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யரிடம் கூறினேன். அவர் என்னை இங்கு வரும்படி சொன்னார்.

சுந்த.—நீர் முத்தையா செட்டியாரின் வீட்டு சமீபம் வந்தபொழுது மணி $11\frac{1}{4}$ இருக்குமென்று சொன்னீரே. அது உமக்கு எப்படித் தெரியும்?

சாக்ஷி.—நான் 11 மணி வரையில் 6 நம்பர் வீதியில் என் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். ஆகவே, 6 நம்பர் வீதியிலிருந்து, முத்தையா செட்டியார் வீட்டுக்குவர, 15 நிமிஷம் பிடிக்குமென்று ஊகித்து, $11\frac{1}{4}$ மணி என்று சொன்னேன்.

சுந்த.—சரி; அவ்வீட்டிலிருந்து வெளியே வந்தவன் யாரென்பது உமக்குத் தெரியுமா?

சாக்ஷி.—தெரியாது.



சுந்த.—அவனை நீர் மறுபடியும் பார்க்க நேரிட்டால், அடையாளம் புரியுமா?

சாக்ஷி.—நன்றாய்ப் புரியும்.

சுந்த.—சரி; இங்கே அந்த ஆசாமி இருக்கிறானாவென்று பாரும்.

உடனே சாக்ஷி நாலாபக்கங்களையும் கவனித்தான். கடைசியில் அவனுடைய பார்வை வாசுதேவன்மீது விழவே, அவனுடைய முகத்தில் ஆச்சர்யத்தின் குறிகள் மிகவும் தென்பட்டன. பிறகு, கொஞ்சநேரம் வாசுதேவனை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். இதைக் கண்ட சுந்தரம் பிள்ளை,

"என்ன ஐயா! ஏன் தயங்குகிறீர்?" என்று வினவினார். சாக்ஷி, உடனே விடையளிக்காமல், தன் மனதிலிருப்பதை வெளியிட இஷ்டப்படாதவன்போல் காணப்பட்டான். ஆனால் சுந்தரம் பிள்ளை துரிதப்படுத்தவே, அவன் வாசுதேவனைக் காண்பித்து,

"நான் கண்டது இவர் என்பதில் சந்தேகமில்லை." என்றான். இதைக் கேட்டதும், வாசுதேவனுடைய முகம் மேலும் வெளுத்தது. அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த கோபால செட்டியாரும் பாலகிருஷ்ணனும், திடுக்கிட்டு, திகைப்புற்றனர். ஆனால் வாசுதேவன், உடனே தன் குழப்பத்தை யடக்கிக்கொண்டு, கம்பீரத்துடன் எழுந்துநின்று, சுந்தரம் பிள்ளையை நோக்கி,

"நான் மிகவும் தாழ்மையுடன்—" என்று அவன் மேலே பேசுமுன், சுந்தரம் பிள்ளை, அவனைத் தடுத்து,

"உம்மை ஏற்கனவே விசாரித்தாய்விட்டது. ஆகையால் இனிமேல் நீர் பேசக்கூடாது." என்றார்.

வாசு.—(மரியாதையுடன்) அப்படியல்ல. இந்த சாக்ஷியின் வார்த்தைகளின் பலனாய் ஏற்கனவே என்மேலிருக்கும் சந்தேகம் அதிகரிக்குமென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

**சுந்த.**—சரி; நீர் சொல்லிக்கொள்ளவேண்டியதென்ன? சீக்கிரம் சொல்லும்.

**வாசு.**—நான் வீண் காலதாமதம் செய்யப்போவதில்லை. என் தந்தையின் வீட்டிலிருந்து 9 மணிக்குள் வந்துவிட்டேனென்பதை தெய்வத்தின்மேல் ஆணையாய்ச் சொல்லுகிறேன். இப்பொழுது இவர் (சாக்ஷி) என்னை $11\frac{1}{4}$ மணிக்கு அவ்வீட்டிலிருந்து வரும்பொழுது பார்த்ததாகச் சொல்லுகிறார். இவருடைய வார்த்தை எவ்வளவுதூரம் என்னை பாதிக்கக்கூடுமென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. வாஸ்தவமாய் நான் 9 மணிக்குள் அவ்வீட்டிலிருந்து வெளியே வந்துவிட்டேனென்பதையும், பிறகு 12 மணி வரையில் நான் சொன்னபடி தோட்டத்திலுட்கார்ந்துகொண்டிருந்தேனென்பதையும் ரூபிக்க சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆனால் இவர் (சாக்ஷி) தான் சொல்லுவது நிஜமென்பதை ரூபிக்கமுடியுமா? ஆகவே, என்னுடைய வார்த்தைகளை சந்தேகிக்கக்கூடுமானால், இவருடைய வார்த்தைகளும் சந்தேகிக்கத்தக்கனவேயென்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் நான் இதை ஆக்ஷேபிக்காவிட்டால், நான் இதை நிஜமென்று ஒப்புக்கொண்டதாக ஆய்விடுமாகையால், இந்த சாக்ஷியை நான் இங்கே கண்டிப்பாய் ஆக்ஷேபிக்கிறேன்.

* * * * *

அதே இரவு சுமார் 8 மணியிருக்கும். கோபாலசெட்டியாருடைய வீட்டில் அனைவரும் தத்தளித்துக்கொண்டிருந்தனர். பாலகிருஷ்ணன் என்ன செய்வதென்று புரியாமல் திகைப்புற்று, கவலையே வடிவாக, தன் தந்தையின் எதிரில் உட்கார்ந்துகொண்டிருந்தான். நடுவில், கோபால செட்டியார்,

"பாலகிருஷ்ணா! இது எப்படி முடியுமோ தெரியவில்லையே." என்றார்.



அப்படியே அவளை எரித்துவிட நினைத்தவர்போல் அவளை நோக்கிவிட்டு,

"ஏன் தியாகு தீக்ஷதரே! என்ன தாமதம்? சீக்கிரப் படுத்தும்." என்று துரிதப்படுத்தினார்.

மறு நிமிஷம் ஸரஸ்வதி தன் மாலையை சாம்பமூர்த்தியின் கழுத்தில் போடுந்தருவாயிலிருந்தாள். ஆனால் அச்சமயம், வெகு வேகமாய் வந்த ஒரு மோட்டார் வண்டி அவ்வீட்டிற்கெதிரில் நிற்கவே, தன் மாலையைத் தூக்கிப்பிடித்தவண்ணம் திரும்பிப் பார்த்த அம்மங்கை, உடனே அம்மாலையை வெறுப்புடன் தூர எறிந்துவிட்டு, அவ்விடத்தைவிட்டு ஓடினாள். அதற்குக் காரணம், அவள் அவ்விதம் திரும்பிப் பார்த்தபொழுது, அம்மோட்டாரிலிருந்து தன் காதலன் கங்காதரன் இறங்குவதைக் பார்த்துவிட்டாள்.

நிற்க, கீழே இறங்கிய கங்காதரன், அவ்வீட்டிற்குள் ஓடிவந்து, அங்கு நின்றுகொண்டிருந்த சில வைதீகர்களை நோக்கி, வர்ணிக்க இயலாத ஆவலுடனும் கவலையுடனும், "திருமங்கல்யதாரணம் ஆய்விட்டதோ?" என்று கேட்க, தியாகு தீக்ஷதர் 'இல்லை' என்பதற்கு அடையாளமாக தன் தலையை ஆட்டவே, அவ்வாலிபன், பெருமூச்செறிந்த வண்ணம், இன்னும் கையில் மாலையுடன் நின்றுகொண்டிருந்த சாம்பமூர்த்தியை ஒருதரம் ஏற இறங்க கவனித்தான்.

இதைக்கண்ட சாம்பமூர்த்தியின் அத்தை, அடக்க இயலாத கோபத்துடன்,

"இதென்ன இது? இந்தப் புள்ளை யார்?" என்று கர்ஜித்தாள்.

இதற்குள் அங்கு வந்துசேர்ந்த ஸரஸ்வதியின் தாயார் அதுவரையில் ஒளிந்துகொண்டிருந்த கங்காதரன் அவ்விதம் பகிரங்கமாய் வந்திருப்பதைக் கண்டதும், வியப்பும் திகைப்பும் அடைந்தவளாய், வாயைத் திறந்து அவனுடன் பேசவும் சக்தியின்றி அவனை உற்றுநோக்கியவண்ணம்

நின்றாள். இதைக் கண்ட கங்காதரன், அவளை நோக்கி மிகவும் மரியாதையுடன்,

“ அம்மா ! தெய்வானுக்கிரகத்தால் சமயத்தில் வந்துவிட்டேன். உடனே தயவுசெய்து உங்களுடைய பெண்ணை அழைத்துக்கொண்டு வாருங்கள் போவோம்.” என்று கூறவே, சாம்பமூர்த்தியின் அத்தை,

“ அடேயப்பா ! இவனுக்கென்ன இவ்வளவு ஸ்வாதீனம் ? ஆமாம் ; இவன் யார் ? இவன் செய்யும் காரியத்திற்கு இவன்மீது மானநஷ்டத்திற்கு வியாஜ்யம் போடலாமே.” என்று கூறவே, கங்காதரன், புன்முறுவல் செய்தவண்ணம், அமைதியுடன்,

“ அம்மா ! நீங்கள் வியாஜ்யம் போடுவதில் எனக்கு ஆக்ஷேபணையே கிடையாது. ஆனால் முதலில் அதற்கு தைர்யம் உண்டாவென்று நீங்கள் அவனை (சாம்பமூர்த்தியை) கேட்பது நலம்.” என்றான். இதைக் கேட்டதும் சாம்பமூர்த்தி, வீராவேசத்துடன் ஓடிவந்து, கங்காதரனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

“ ஏண்டா காலாடிப்பயலே ! யாரடா நீ ? இவ்விதம் இக்கல்யாணத்தை நிறுத்த உனக்கென்ன பாத்யம் ? நீ உடனே மரியாதையாய் வெளியே போகாவிட்டால், உன்னை கலகம் செய்வதற்காக, உடனே போலீஸார்வசம் ஒப்புவித்துவிடுவேன்.” என்று பயமுறுத்தவே, கங்காதரன்,

“ டேய் ! முதலில் என் கைகளை விடு. சரி ; இக்கல்யாணத்தை நிறுத்த எனக்கு என்ன பாத்தியமென்று கேட்கிறாய் ? சொல்லுகிறேன் கேள். இந்தப் பெண்ணை நீ விவாஹம் செய்துகொள்வது மகா பாபம். பம்பாயில் நீ என்ன கார்யம் செய்துவிட்டு இங்கு ஓடிவந்திருக்கிறாயென்பது எனக்குத் தெரியும்.” என்றான்.

இதைக் கேட்டதும் சாம்பமூர்த்தி திடுக்கிட்டான். உடனே அவனுடைய முகம் வெளுத்தது. ஆனால், அவனுடைய கலவரத்தையும் பீதியையும் கவனிக்காத தர்மாம்பாள், கங்காதரனை நோக்கி,



“ ஏண்டாப்பா ! அவன் பம்பாயில் என்ன செய்தான் ? என்னமோ பிரமாதமாய் பயமுறுத்துகிறாயே.” என்று வினவ, கங்காதரன், சாம்பமூர்த்தியை நோக்கி,

“ ஏண்டா ! இந்த அம்மாள் கேட்கும் கேள்விக்கு நான் விடையளிக்கட்டுமா?” என்று வினவ, சாம்பமூர்த்தி, தன் இருகரங்களையும் கூப்பிக்கொண்டு,

வேண்டாம் ; வேண்டாம். என்னைக் காப்பாற்று. நான் அந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளவில்லை.” என்று அலறினான்.

நிற்க, அதுவரையில் தன் வாயைத் திறக்காமல் நின்றுகொண்டிருந்த சிதம்பரய்யர், கங்காதரனை நோக்கி,

“ அப்பா ! நீ வக்கீல் கல்யாணராமய்யருடைய பிள்ளை அல்லவோ ? நீயும் இதுவரையில் போலீஸாருக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருந்தாயென்பது எனக்குத் தெரியும். நீ இப்பொழுது இவ்வளவு தைர்யத்துடன் இங்கு வந்திருப்பதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. ஆனால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இன்னும் இந்தப் பெண்ணை நீயும் விவாஹம் செய்துகொள்ள ஆசைப்பட்டாயென்று எனக்குத் தெரியும். அதற்காக, நீ இப்படி வந்து கலகம் செய்வது நியாயமல்ல. தயவுசெய்து உடனே வெளியே போய்விடு.” என்று அதிகாரத் துவனியில் கூறவே, கங்காதரன்,

“ ஸ்வாமி ! இந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொள்ள நானும் ஆசைப்படுகிறேனென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இப்பொழுது நான் இங்கு வந்து இவ்விதம் இக்கல்யாணத்தை நிறுத்த முயலுவதற்குக் காரணம் பொறாமையல்லவென்பதை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவன் (சாம்பமூர்த்தி) வாஸ்தவத்தில் யோக்கியனாயிருப்பானாகில் இப்பொழுதும் அவன் இந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளுவதில் எனக்கு ஆக்ஷேபணை கிடையாது. ஐயா ! அவன் பம்பாயில் என்ன செய்துவிட்டு இங்கு வந்திருக்கிறானென்பது

உங்களுக்குத் தெரிந்திருந்தால், அவன் விவாஹம் செய்துகொள்வது மகா பாபமென்பதை நீங்கள் நிச்சயமாய் ஒப்புக்கொள்வீர்கள். ஆகவே, இப்பொழுது நான் இங்கு வந்ததற்குக் காரணம் அநியாயமாய் ஒரு பெண்ணின் கெதி அதோகெதியாய் போய்விடப்போகிறதே என்ற அனுதாபமும் கவலையுமேயொழிய, அனாவசியமாய் கலகம் செய்து, இவ்விவாஹத்தை நிறுத்தி, அவளை நான் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்ற அபேக்ஷையல்ல. சரி; நானும் இதுவரையில் போலீஸாருக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருந்தேனென்பதும் வாஸ்தவமே. ஆனால் அதைச் சொல்லி நீர் என்னைப் பயமுறுத்தவேண்டாம். ஏனெனில் இனி நான் பயந்து ஒளிந்துகொண்டிருக்கவேண்டியது அனாவசியம். நான் நிரபராதியென்பதையும், குருஸ்வாமியை வாஸ்தவத்தில் அன்று அடித்த என் தமயனை அவமானத்திற்கும் கஷ்டத்திற்கும் உள்ளாக்க மனமில்லாமல் அக்குற்றத்தை நான் ஏற்றுக்கொண்டேனென்பதையும் ஏற்கனவே போலீஸார் ரூபித்துவிட்டார்கள்.—" என்று அவன் மேலே பேசுமுன் ஸரஸ்வதியின் தாயார், சொல்லொணா ஆவலுடன்,

"அப்பா! என்ன சொன்னாய்? குருஸ்வாமியை அடித்தது உன் தமயனா? நீ நிரபராதியென்று போலீஸார் ஏற்கனவே ரூபித்துவிட்டார்களா? கங்காதரா! நீ சொல்வதை என்னால் நம்பமுடியவில்லையே." என்று கூறவே, கங்காதரன்,

"அம்மா! நான் சொல்வது நம்பத்தகாததுதான். ஆனால் அது உண்மையேயொழிய புளுகல்ல. அப்படியே நான் சொல்வது புளுகாயிருந்தபோதிலும் நீங்கள் உங்களுடைய பெண்ணை இந்த சாம்பமூர்த்திக்குக் கொடுப்பது மிகவும் பிசகு. அவன் பெரிய குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறானென்பதை இதோ அவனுடைய முகத்தைப் பார்த்ததுமே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அவன் அப்படிச் செய்தது என்னவென்பதை நான் இப்பொழுது இங்கு சொல்வது சரியல்ல. ஆகவே, தயவுசெய்து உடனே உங்



களுடைய பெண்ணை அழைத்துக்கொண்டு, வாருங்கள் போவோம். நான் வந்த மோட்டார் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறது." என்றான்.

இதைக் கேட்டதும், ஸரஸ்வதியின் தாயார் திரும்பி சாம்பமூர்த்தியை ஒருதரம் உற்றுநோக்கினாள். இதற்குள் சாம்பமூர்த்தியின் கைகால்கள் நடுங்கவாரம்பித்துவிட்டன. அவன் எப்படியாவது அவ்விடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டால் போதுமென்று நினைப்பவன்போல் காணப்பட்டான். அவனுடைய அத்தை, திகைப்புற்று, தன் வாயைத் திறக்க அஞ்சியவளாய், கங்காதரனை உற்றுநோக்கியவண்ணமிருந்தாள்.

பிறகு, ஸரஸ்வதிக்காக வகாலத்து வாங்கிக்கொள்ளத் தயாராயிருந்த பர்வதம், அதுதான் சமயமென நினைத்தவள்போல், தர்மாம்பாளை நோக்கி, முகத்தில் ஜயலெக்ஷ்மி தாண்டவமாட,

"அம்மாமி! 'நம்ப சாம்பூ எதில் குறைந்தவன்?' என்று கன ஜம்பமாய்க் கேட்டீர்களே. உங்களுடைய சாம்புவின் வாயில் என்ன குழக்கட்டையா?" என்று வினவவே, அங்கிருந்த அனைவரும் கலகலவென்று நகைத்தனர்.

பிறகு, தன் காதலன் நிரபராதியென்பதையும், சாம்பமூர்த்தி இனி தன்னை விவாஹம் செய்துகொள்ளத் துணியமாட்டானென்பதையும் அறிந்ததும் நம் ஸரஸ்வதி அடைந்த சந்தோஷத்தை நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். கங்காதரன் 'அம்மா! உங்களுடைய பெண்ணை அழைத்துக்கொண்டு வாருங்கள் போவோம். நான் வந்த மோட்டார் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறது' என்று கூறியதும், அம்மங்கை, பக்கத்திலிருந்த தன் தோழியின் கரங்களைப்பற்றி, 'ராஜம்! வா போவோம்.' என்று கூறியவண்ணம் அவளை அழைத்துக்கொண்டு துரிதமாய்ச் சென்று வெளியில் நின்றுகொண்டிருந்த மோட்டாரில் ஏறி உட்கார்ந்துகொண்டாள். அவ்விதம் அவ்விருவரும் சென்றதும் ஸரஸ்வதியின் தாயார் தான் தயங்குவதில் பிரயோ

ஜனமில்லையென நினைத்து தன் தங்கையையும் அவளுடைய புருஷரையும் நோக்கி,

“இது இப்படி முடியுமென்று நான் நினைக்கவில்லை. நீங்கள் இருவரும் தயவுசெய்து என்மீது மனஸ்தாபப் படாமலிருக்கவேண்டும். சரி; நான் போய்விட்டுவருகிறேன்.” என்று கூறிவிட்டு, விடைபெற்றுக்கொண்டு, வெளியே சென்று, மோட்டாரில் தன் பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். உடனே கங்காதரனும் ஏறி அதற்குள் உட்கார்ந்துகொண்டதும் அது புறப்பட்டது.

மோட்டார் கொஞ்சதூரம் சென்றதும் ஸரஸ்வதியின் தாயார், “என்ன ஆச்சர்யம்! எனக்கு இன்னும் ஸ்வப்பனம் போலிருக்கிறதே.” என்று கூறியவண்ணம் கங்காதரனை நோக்கி, “ஆமாம்; இங்கு இன்று கல்யாணம் நடக்கிறதென்று உனக்கு எப்படித் தெரியும்? இதுவரையில் நீ எங்கு இருந்தாய்?” என்று பிரியத்துடன் வினவ, கங்காதரன்,

“நான் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணி வரையில் பம்பாயில் இருந்தேன். அன்று இரவு சுமார் 8 மணிக்கு நான் ஒரு தோட்டத்திலுட்கார்ந்துகொண்டிருந்தபொழுது, என் சமீபத்தில், இந்த சாம்பமூர்த்தியின் நண்பர்கள் இருவர் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்த சாம்பமூர்த்தியைப்பற்றி எனக்கு ஏற்கனவே நன்றாய்த் தெரியுமாகையால், எப்படியாவது இவ்விவாஹத்தை நிறுத்திவிடுவதென்று தீர்மானித்து அதே இரவு மெயிலில் புறப்பட்டு நேற்றுமாலை வஸந்தபுரி வந்துசேர்ந்தேன். நான் நிரபராதியென்று ரூபிக்கப்பட்டுவிடுமென்று எனக்கு அப்பொழுது தெரியாதாகையால் நான் ஒரு சந்யாஸியைப் போல் மாறுவேஷம் அணிந்துகொண்டு, நேற்று இரவு சுமார் 10 மணிக்கு, என் வீட்டிற்குச் சென்று என் தாயாரைக் கண்டு பேசியதிலிருந்து, என் தமயன் இறந்துவிட்டதையும் இன்னும் என்னை நிரபராதியென்று ரூபிக்க என் தாயார் பிரயத்தனப்படுவதையும் தெரிந்துகொண்டேன். ஆனால் நான் குற்றவாளியல்லவென்று நிச்சயமாய் ரூபிக்கப்



படுமுன் பகிரங்கமாய் நான் வெளிவருவது ஆபத்திற்கிடமென்று பயந்து நேற்று இரவு முழுமையும் ஸ்திரீ வேஷம் அணிந்துகொண்டு என் தாயாருடன் இருந்தேன். (கார்யஸ்தர் ராமானுஜய்யங்கார் கங்காதரன் தாயாருடைய அறைக்குள் நுழைந்தபொழுது அவர் பார்த்ததும், அம்மாது ‘அவள் என் அம்மங்காளுடைய பெண்.’ என்று கூறியதும் நம் கங்காதரனையே யொழிய வேறல்ல.) பிறகு இன்று காலை 7 மணிக்குள் ஸப் இன்ஸ்பெக்டர் நடேசய்யர் என் வீட்டிற்கு வந்து இனி நான் ஒளிந்துகொண்டிருக்கவேண்டியது அனாவசியமென்று கூறவே, என் சுயரூபத்துடன் ஒரு மோட்டாரை அமர்த்திக்கொண்டு வந்தேன்.” என்றான். உடனே ஸரஸ்வதியின் தாயார்,

“ஆமாம்! அந்தப் பிள்ளை (சாம்பமூர்த்தி) பம்பாயில் என்ன செய்தான்?” என வினவ, கங்காதரன்,

“அம்மா! அதை நினைக்கும்பொழுதே என் மனம் பதறுகிறது. பரமசண்டாளனாகிய அவன் பம்பாயில் தான் குடியிருந்த அறைக்குப் பக்கத்து அறையிலிருந்த 11 வயதுள்ள ஒரு குஜராத்திப் பெண்ணின் கற்பை பலாத்காரமாய் அழித்ததின் பலனாய், பாவம்! அப்பெண் அது நடந்த ஒரு மணி சாவகாசத்திற்குள் இறந்துவிட்டாள்.” என்றான்.

## அத்தியாயம் 15.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து கிட்டத்தட்ட ஒரு வருஷகாலம் கழிந்துவிட்டது.

ஒரு நாள் மாலை 5 மணி இருக்கும்.

அச்சமயம் கங்காதரனுடைய தாயார் தன் பிள்ளையுடன் பேசிக்கொண்டிருந்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம் சுமார் 60 வயதுள்ள ஒரு கிழவி, அங்கு வந்து கங்காதரனுடைய தாயாரை நோக்கி,

“ஏண்டி ஞானம்! உன் நாட்டுப்பெண் ஸரஸ்வதி கர்ப்பமாமே. இன்று மத்தியானம்தான் ஜோடியாத்து காமாக்ஷி என்னிடம் சொன்னாள். ஆமாம்; வளைகாப்பு எப்பொழுது?” என்று வினவ, கங்காதரனுடைய தாயார்,

“நாளை தீக்ஷிதரை நாள் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்.” என்று விடையளித்தாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!



இருவர் தணிவான குரலில் பேசுவது நன்றாகக் கேட்டது. பின்னர் ஒரு பெண்ணின் பேச்சுக்குரலும் சிறிப்பும் அறையினின்று வந்தது. ஜயஸிங் ஒரு கட்குடியனைப் போல் குழறிப் பேசிக்கொண்டே கதவைத் தட்டினான். ‘என் ஆசைக் கண்ணாட்டியின் வீட்டில் யாரடா உள்ளே இருந்துகொண்டு கதவைத் திறக்கமாட்டேன் என்பது? திறக்கிறாயா அல்லது கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வரட்டுமா? எவனுக்கு என் வீட்டில் புகுர அவ்வளவு தைரியம் வந்தது? கண்ணாட்டி! என் தங்கம்! கதவைத் திற.’ என்று தட்டுத்தடுமாறிப் பேசிக்கொண்டே கதவைப் பலமாக இடித்தான்.

உடனே வேகமாக கதவின் தாள் விலக்கப்பட்டது. ‘எந்த மடையக் குடிகாரன் இந்த இராத்திரிவேளையில் கதவைத்தட்டி தொந்தரவுசெய்கிறது? மரியாதையாய்ப் போகிறாயா? போலீஸாரிடம் பிடித்துக்கொடுக்கட்டுமா?’ எனக்கோபக் குரல் ஒன்று வெளிப்பட்டது.

ஜயஸிங், வந்த மனிதனது அடையாளங்களை அறிந்துகொண்டு, மேலும் திக்கித்திக்கிப் பேசினான். நேரே வாசற்படிக்கு எதிரே ஒரு அறையில் ஒரு யௌவன மாதும் ஒரு வாலிபனும் உட்கார்ந்திருப்பதை ஜயஸிங் அறிந்துகொண்டான். அவர்கள் கோபாலகிருஷ்ணனும் அவன் மனைவியாகவும் இருக்கலாமோ எனச் சந்தேகித்தான். உடனே அவன் பழையபடி ‘என்னுடைய வீட்டில் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உடனே வெளியே போய் விடுங்கள்.’ எனக் குழறினான்.

‘மறுபடியும் இங்கே உளறுகிறாய் மூடா! உடனே போ வெளியில்.’ என்று நின்றிருந்த மனிதன் ஜயஸிங்கை வெளியே தள்ள முயன்றான். ஆனால் அவன் எதிர்பாராவாறு திடீரென ஜயஸிங், புலிபோல் பாய்ந்து, அவன் கழுத்தைத் தன் இரும்புபோன்ற பலமான கைகளால் பிடித்து நெருக்கி வெளியே மோதி அடித்தான். அவன் படாரென்று வெட்டிச்சாய்ந்த பனைமரம் போல் கீழே விழுந்தான்.

அப்பொழுது அங்கிருந்த யௌவன யுவதி, திடீரெனக் கூச்சலிட்டு, பக்கத்திலிருந்த அறையினுட் புகுந்து, ஒரு கூரிய கற்களிழைத்த சிறிய கத்தியை கையிலெடுத்துக்கொண்டாள். உடனே அவள், "அடே முனியாண்டி! கதவை மூடு; இவன் நம்மை துறைமுகத்தில் கவனித்த துப்பறிபவர்களின் கூட்டத்தில் ஒருவன், இவன் ஜயஸிங் என்பதில் சந்தேகமேயில்லை. நான் அப்பொழுதே கூறினேன். இவனிடம் ஜாக்கிரதையாய் இருக்கும்படியும், இவன் கண்களில் படாதிருக்குமாறும் பலதரம் கூறினேன். இவர் கவனிக்கவில்லை, அதன் பலன் இதுதான். இந்த எலியை வெளியே விட்டுவிடக்கூடாது. ஒன்று அவனை ஒழித்துவிடவேண்டும், இன்றேல் நாம் இறக்கவேண்டும்" என்று கத்தினாள்.

ஜயஸிங் வீரநாதன்மேல் பாய்ந்தான் ஆயினும் அவன் கைக்கு அகப்படவில்லை. தன்பின்னே ஓர் மனிதன் பதுங்கி வருவதையறிந்த ஜயஸிங் திடீரென கீழே படுத்து, அம்மனிதனது கால்களைப் பிடித்து இழுக்கவும், அவன் சுவற்றில் இடித்துக்கொண்டு கீழே சாய்ந்தான். இதற்குள் அந்த யுவதி சுழல் துப்பாக்கியால் சுடும்படி வீரநாதனை எச்சரித்தாள். உடனே 'டமில்' என்று வெடிச்சத்தம் கிளம்பியது. ஜயஸிங் திடீரென கீழே குனிந்தான். குண்டு எதிரிலிருந்த சுவற்றில் பாய்ந்தது. அதே சமயம் திடுதிடெனப் பலர் உள் நுழைந்தனர். ஜயஸிங் வீரநாதனைப் பிடித்துக்கொண்டு தலையைப்பிடித்து ஆட்டினான். இதைக் கண்டு பயந்து திகில்கொண்டு நங்கை மூர்ச்சித்து கீழே சாய்ந்தாள். ஜயஸிங் பிரமித்து, "ஆ! கோபாலபுரம் இளைய ஜமீன்தார் விஜயரங்கம்! அல்ல வீரநாதன்!! கடைசியாக கோபாலகிருஷ்ணன் !!! இன்னும் ஏதேனும் பெயருண்டா? ஏன் பேசாமல் நிற்கிறாய்?" என்று கழுத்தைப் பிடித்தாட்டவும், சிறிய எலுமிச்சம்பழம்போன்றதொன்று கீழே விழுந்து, கண்ணாடி உடைவதைப்போன்று உடைந்தது. விஜயரங்கத்திற்கு விலங்கிடப்பட்டது. [illegible] ஸ்ரீநிவாஸன் கீழே விழுந்திருந்த மனிதனை இறுகக்கட்டி



விட்டான். அப்பொழுது ஜயஸிங் கீழே மூர்ச்சித்து விழுந்திருந்த யுவதியை விளக்கு வெளிச்சத்தில் உற்றுப் பார்த்ததும் திடுக்கிட்டு, "ஆ சந்திரா! இவ்வளவும் உன் வேலைதானா? நான் அப்பொழுதே 'விஜயரங்கத்தின் மாறுபாட்டிற்குக் காரணம் ஸ்திரீ விஷயமாயிருக்கலாம், நாம் இப்பொழுது அந்த மாதைக் கண்டுபிடிக்கவேண்டும்?' என்று கூறினேன். அது உண்மைப்பட்டது." என்றான்.

"மனிதன் விவாகத்திற்கு முன்பு, அல்லது ஒரு யுவதியுடன் பழகுவதற்கு முன் ஒருவிதம். பின்னரோ, அவனிடம் பல மாறுதல்கள் நிகழ்வது கண்கூடு. ஸ்திரீயின் சக்தியால் மனிதன் ஒரு புது உருவினனாகிறான். அவன் போக்கே முற்றும் மாறுபடுகின்றது. ஆடவர் மனது எத்தகைய துன்பங்களால் வருத்தப்பட்டிருந்தாலும், மாதர்களின் கடைக்கண்பார்வை ஒன்றுக்கு அம்மனிதனைக் கரையேற்றும் அரும்பெரும் சக்தியுண்டு. எத்தகைய பலசாலியும், வீரனும், அறிஞனும், புலவனும், நூலாசிரியனும், பெரும் கீர்த்திவாய்ந்தவனும் பெண் சக்திக்கு அடிமைப்படுகின்றான். பெண்துணை கொண்டால் எத்தகைய அரிய காரியத்தையும் சாதிக்கும் வன்மை ஏற்படுகின்றது. பெண் துணையின்றேல் விடுதலை பெறுவதும் அரிதாகும் ஸ்திரீ சக்தி வெகு விசித்திரம்." என ஜயஸிங் கூறி, "பெண்கள் நேசமாயிருக்கும்பொழுதும் பகைக்கும்பொழுதும் எதையும் செய்யப் பின்னடையார்கள். அவ்வாறே தைரியமும் [illegible] நிறைந்த சந்திராவின் துணைகொண்டு, விஜயரங்கம் திடுக்கிடத்தக்க வைரக் கொள்ளைகளை தந்திரமாக எளிதில் நடத்தியிருக்கிறானாயினும், எப்பொழுதும் 'அல்லாவழி அல்லலையே விளைக்கும்.' என்பதை சிறிதும் நினைக்கவில்லை." என்று கூறிக்கொண்டே கீழே விழு[illegible] என்ன வென்பதை கவனித்த[illegible] போனான். ஏனெனில் அங்கே கீழே விழுந்து [illegible] கியது விஜயரங்கத்தின் ஒற்றை போலிக்கல். அ[illegible]குப் பக்கத்தில், ஆ. ல. பெ. ள. சோமசுந்தரம் செட்டியாருக்கு சொந்தமானதும், சமீபத்தில் களவாடப்பட்டது

மான "பாரிஜாதம்" என்ற உயரிய வைரம், பிரகாசித்துக்கொண்டு கீழே கிடந்தது. ஜயஸிங் விஜயாங்கத்தின் சாமார்த்தியத்திற்காக மெச்சினனாயினும், அவன் செயலுக்கு நேரப்போகும் பலனைக்கருதி வருத்தப்பட்டான். இதையறிந்த ஜமீன்தார் கமலசேகரரும் வருந்தினார். ஆயினும் 'அவரவர் விதிவழிமதி'. அதற்குப் பிறர் என் செய்யக்கூடும். 'இட்டார்க்கு இட்ட பலன்.'

முற்றும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
188782
சென்னை-600 008

# 1931ஆ ஜூன்மீ பஞ்சாங்கம்

| தேதி | த.மீ | வார. திதி, நக்ஷத்திரம், நியாஜ்ஜியம், யோகம் முதலியன. |
|---|---|---|
| 1 | கஅ | திங் பிரத-ருசு, கேட் உஅ-ருள,தி ருன் கச, காக்ஸைப்த,சி. |
| 2 | ௨0 | செவ் துவி கஉ-ருஉ, மூல கஎ-கள, சேக-உ, தி உஉ-சச, தஞ்ஜை [புஷ்ப சிவி, அ, சி. |
| 3 | உக | புத திரு ஙஉ-உ, பூரா ஙக-சஅ, [திஉ-உரு, ஸம-சது, அ. |
| 4 | உஉ | வியா சது கசு-உஅ, உத்ரா சஉ-ச [திO ருஉ, தி ருஉ-சக, சி. |
| 5 | உங | வெ பஞ் உஎ-க, திரு சஎ-உஉ, [தி ருஅ-உக, ம, சி. |
| 6 | உச | சனி ஷஷ்ட சO-ருO, அவி ருஉ ருரு, சே உ-கஉ, சி,அ. |
| 7 | உரு | ஞாயி ஸப் சரு-கஏ,சத ருக-உ, தி கஉ-சரு, காளாஷ்டமி,சி. |
| 8 | உசு | திங் அஷ் ருO-க, பூரட் கO-O, தி கக-சரு, சி |
| 9 | உஎ | செவ் நவ ருரு-க, பூரட் ரு-கO, தி கஉ-உ, ம, அ. |
| 10 | உஅ | புத தச ருக-கஎ, உத்ரட் கக-ருO, தி சச-சஅ, சி,ம. |
| 11 | உகூ | வியா ஏகா கO-O. ரேவ கஎ-சரு, தி O-O, சி, அ. |
| 12 | ௩0 | வெ துவா உ-உச,அசு உஉ-ருரு, திஉஉ-க, திசஅ-கரு, ஸர் [ஏகா, அ, சி. |
| 13 | ௩க | சனி த்ரயோ க-கஉ பரஉஎ-ச, ※ தி ருஅ-கO, பிர-உ, சி,அ. |
| 14 | ௩உ | ஞாயி சது ஏ-ருக,கார்க-ருஎ, சேஉ உரு,ருதிதி, மிது-ரவி [திக-சக சி அ. |
| 15 | ௩௩ | திங் சது அ-உச, ● ரோகை-நக,தி கக-ரு,ஸர்வஅமா,ருன் |
| 16 | ௩ச | செவ் அமா ஏ-கச மிரு கஉ-அ,தி சக-கரு, சி,ம. [திதி,அ. |
| 17 | க | புத பிர ரு-கக, திரு கக-உச, தி O-O, –, சி. |
| 18 | உ | வியா துவி உ-கக, திரு ருரு-ருஅ, புன உக-சஉ, தி O-கச, [தி சஅ-ருஉ, அ. |
| 19 | ௩ | வெ சது ருக உக, பூச உஎ-கக தி ருஎ-கக, சது-விரு,ம |
| 20 | ச | சனி பஞ் சஎ-ருக,ஆயி உச-க, சே க-ச, தி ருஉ-க, ம,அ. |
| 21 | ரு | ஞாயி ஷஷ் சஉ-க,மக உO-சஅ,தி கஅ-ருஎ,ஷஷ்டிஉப,ம சி. |
| 22 | சு | திங் ஸப் ரு-ருக,பூரக-கக திக உ கடகாயஉஉ உருசி. |
| 23 | எ | செவ் அஷ் உக-ருO உத்ரஉ-கO,தி க-சஎ,ஆனி திரு, அ,சி. |
| 24 | அ | புத நவ க-ருஉ,ஹஸ் அ-கஉ, திஉக-ருக, திதி த்வயம்,ம,சி. |
| 25 | கO | வியா தெ கஅ-உக, சித் ச-கஉ. தி கஎ சஎ, சி அ. |
| 26 | கக | வெ ஏகா கக-கக, ஸ்வா க-சஅ, விசா ருஎ-கஎ, தி கச-சரு, |
| 27 | கஉ | சனி துவா க-உ,அனு ருஎ-சஅ,தி அ-சச,சி [ஸர்வ-ஏகா, சி. |
| 28 | க௩ | ஞாயி திர ரு-கச,கேட் ருக-கக,திகக-கO,ம,அ. |
| 29 | கச | திங் சது க-கச, ○; மூலருஎ-ச,திக-சஉ, திருக-உ,மன்ரு |
| 30 | கரு | செவ் பௌ உ-க,பூரா ருஅ-சஅ,திஉக-சக,சி. [ர்குடிதெப்,சி. |

| ராகு | சுக் | புத ரவி | வி |
|---|---|---|---|
| | 5 கட-வி<br>7 ரிஷ-சுக்<br>14 மி-ரவி<br>16 ,, புத | | குரு |
| சனி | | | கே |

# "பால வித்யா"

## 1931ஞு ஜூன்மீ பஞ்சாங்கம்.

| ஜூ | த.தீ | வார. திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன. | |
|---|---|---|---|
| 1 | ககூ | திங் | பிர ஙங-ருச, கேட் ஙகூ-ருஎ, தி ருஎ கச, காங் ஸப்த, சி. |
| 2 | உ0 | செவ் | துவி ஙஉ-ருஉ, மூல ஙஎ-சஎ, சேக-உ தி ஙங-சச, தஞ்சை [புஷ் சிவி, அ, சி. |
| 3 | உக | புத | திரு ஙங-உ, பூரா ஙகூ-சஅ, [திஉ-ஙரு, ஸங-சது, அ. |
| 4 | உஉ | வியா | சது ஙச-உஅ, உத்ரா சங-ச [தி0 ருங, தி ருங-சக, சி. |
| 5 | உங | வெ | பஞ் ஙஎ-கூ, திரு சஎ-ஙஉ, [தி ருஅ-உகூ, ம, சி. |
| 6 | உச | சனி | ஷஷ்ட ச0-ரு0, அவி ருஉ ருரு, சே உ-ஙக, சி, அ. |
| 7 | உரு | ஞாயி | ஸப் சரு-ககூ, சத ருகூ-உ, தி கஉ-சரு, காளாஷ்டமி, சி. |
| 8 | உசா | திங் | அஷ் ரு0-கூ, பூரட் கூ0-0, தி ககூ-சரு, சி |
| 9 | உஎ | செவ் | நவ ருரு-க, பூரட் ௬-ங0, தி ஙஉ-உ, ம, அ. |
| 10 | உஅ | புத | தெ ருகூ-ஙஎ, உத்ரட் கக-ரு0, தி சச-சஅ, சி, ம. |
| 11 | உகூ | வியா | ஏகா கூ0-0, ரேவ கஎ-சரு, தி 0-0, சி, அ. |
| 12 | ங0 | வெ | ஏகா ங-உச, அசு உஉ-ருரு, திகஉ-ங, திசஅ-ஙரு, ஸர் [ஏகா, அ, சி. |
| 13 | ஙக | சனி | துவா கூ-கஉ, பா உஎ-ச, ※ தி ருஅ-ங0, பிர, கா-உ, சி, அ. |
| 14 | ஙஉ | ஞாயி | திர எ-ருச, கா உகூ-ருஎ, சே உ உரு, கு-திதி, மிது-ரவி [ருக-சங சி அ. |
| 15 | க | திங் | சது அ-உச, ● ரோ ஙக-ஙகூ, தி கக-ரு, ஸர்வஅமா, ஜுன் |
| 16 | உ | செவ் | அமா எ-ஙச மிரு ஙஉ-அ, தி சகூ-கரு, சி, ம. [திதி, அ. |
| 17 | ங | புத | பிர ரு-ஙக, திரு ஙக-உகூ தி 0-0, —, சி. |
| 18 | ச | வியா | துவி உ-கக, திரு ருரு-ருஅ, புன உகூ-சங, தி 0-ஙச, [தி சஅ-ருங, அ. |
| 19 | ரு | வெ | சது ருங உகூ, பூச உஎ-கங தி ருஎ-ஙக, சது-விரு, ம. |
| 20 | சா | சனி | பஞ் சஎ-ருகூ, ஆயி உச-க, சே க-ச, தி ருஉ-கூ, ம, அ. |
| 21 | எ | ஞாயி | ஷஷ்ட சஉ-க, மக உ0-சஅ, தி ஙஅ-ருஎ, ஷஷ்டிஉப, ம சி. |
| 22 | அ | திங் | ஸப் ஙரு-ருங, பூர ககூ-கக தி ங ங உ கடகாய உஉ உரு சி. |
| 23 | கூ | செவ் | அஷ் உகூ-ரு0 உத்ர கஉ-க0, தி க-சஎ, ஆனி திரு, அ, சி. |
| 24 | க0 | புத | நவ ங-ருகூ, ஹஸ் அ-கஉ, தி உகூ-ருகூ, திதிதுவயம், ம, சி. |
| 25 | கக | வியா | தெ கஅ-உங, சித் ச-ஙஉ, தி கஎ சஎ, சி அ. |
| 26 | கஉ | வெ | ஏகா கங-கக, சுவா க-கஅ, விசா ருஎ-ஙஎ, தி கச-சரு, |
| 27 | கங | சனி | துவா கூ-உ, அனு ருஎ-சஅ, தி அ-சச, சி [ஸர்வ-ஏகா, சி. |
| 28 | கச | ஞாயி | திர ரு-ஙச, கேட் ருகூ-ஙக, தி கக-ங0, ம, அ. |
| 29 | கரு | திங் | சது ஙகூ-கச, ○, மூல ருஎ-ச, தி ககூ-சஉ, தி ருகூ-உ, மன்னு |
| 30 | ககூ | செவ் | பௌர உ-ங, பூரா ருஅ-சஅ, தி உக-சகூ, சி. [ர்குடிதெப், சி. |

| ராகு | சுக் | புத ரவி | வி |
|---|---|---|---|
| — | 5 கட-வி<br>7 ரிஷ-சுக்<br>14 மி-ரவி<br>16 ,, புத | | குஜ |
| சனி | | | கே |